# இயேசுவே வாரும்

ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும். வெளி. 22 : 20.



சகோ.காலேப் யோசுவா.
Tele : 04630 456157

" ஒரேப் "
திருவைகுண்டம் - 628 601,
தூத்துக்குடி மாவட்டம்.


## தசமபாகம் மற்றும் காணிக்கைகள்
## (TITHES AND OFFERINGS)

கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காக, கர்த்தரால் சுவிசேஷகனாக ஏற்படுத்தப்பட்டவனாகிய நான் : பிதாவாகிய தேவனாலே பரிசுத்தமாக்கப்பட்டவர்களும், இயேசு கிறிஸ்துவினாலே காக்கப்பட்டவர்களுமாகிய அழைக்கப்பட்டவர்களுக்கு எழுதுகிறதாவது :

உங்களுக்கு இரக்கமும் சமாதானமும் அன்பும் பெருகக்கடவது.

### தசமபாகம்

1. பிரியமானவர்களே, நான் மிகவும் கருத்துள்ளவனாய் தசமபாகம் மற்றும் காணிக்கைகளைக் குறித்து பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புவிக்கப்பட்ட விசுவாசத்தை உங்களுக்கு எழுதி உணர்த்துவது எனக்கு மிக்க அவசியமாய்க் கண்டது.

2. பல ஆண்டுகளுக்கு முன்பு சென்னை மற்றும் திருச்சியில் சகோ.எட் பிஸ்கல் (கனடா) கூட்டங்கள் நடந்தது. திருச்சியில் டாக்டர் மதுரம் ஹாலில் கூட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில்; அங்கு வந்திருந்த சில ஊழியர்கள் என்னை சந்தித்து, அங்கு வந்திருந்த மற்றொரு ஊழியக்காரரை எனக்கு சுட்டிக்காட்டி; இவருக்கு நல்ல வருமானமுள்ள அரசாங்க உத்தியோகம் உண்டு, ஆனாலும் இவர் தனது சபைக்கு வரும் கர்த்தருக்குரியத் தசமபாகம் மற்றும் காணிக்கைகளை இதர ஊழியங்களுக்குப் பகிர்ந்து கொடுக்காது, அவைகள் அனைத்தையும் தனக்கே முற்றிலும் உரியதான ஒரு பக்க வருமானமாகக் கொண்டு; இதர ஊழியர்களை விட, சபை விசுவாசிகளைவிட ஆடம்பரமான வாழ்க்கை நடத்துகிறார்; கர்த்தருக்குரிய வைகளின் பெரும்பாகம் இவருடைய சுயநலத்திற்காகவே உபயோகப்படுத்தப்படுகிறது; அவரது சபை விசுவாசிகளுடைய பொருளாதார நிலையைவிட இவரது பொருளாதாரநிலை நாளுக்குநாள் உயர்ந்துகொண்டே போகிறது; தசமபாகம் மற்றும் காணிக்கைகள் கொடுக்கும் விசுவாசிகள் சத்தியத்தை அறியாது கர்த்தருக்குக் கொடுக்கிறோம் என்ற பெயரில் லோபத்தனமாகத் தங்கள் தசமபாகம் காணிக்கைகளைத் தனி மனிதனுடைய சுகபோக வாழ்க்கைக்குக் கொடுக்கிறார்கள்; தசமபாகம் காணிக்கைகள் விஷயத்தில் பெரும்பான்மையான விசுவாசிகள் ஏமாற்றப்படுகிறார்கள், ஏமாறுகிறார்கள்; ஆதலால் தசமபாகம் மற்றும் காணிக்கைகள் குறித்து ஒரு செய்தி எழுதுங்கள் என என்னைக் கேட்டுக்கொண்டார்கள். நான் அதற்காக அப்பொழுதே ஆயத்தப்பட்டுச் செய்தி எழுத ஆரம்பித்தேன். ஆனால் அது கடந்த டிசம்பர் மாதம்வரை ஒரு முற்றுப்பெறாத நிலையிலே இருந்து வந்தது.

3. கடந்த டிசம்பர் மாதத்தில் ஒரு ஸ்தாபனச் சபை ஊழியர் என்னிடம் வந்து, வேதத்தில் உள்ள அநேக உபதேசங்களுக்கடுத்தக் காரியங்களில் தனக்கு உள்ள சந்தேகங்களை நிவிர்த்தி செய்துக்கொண்டார். எங்களது உரையாடலில் தசமபாகம் மற்றும் காணிக்கைகள் ஒரு அம்சமாக இருந்தது. அவர் தன்னுடைய தலைமை தசமபாகம் மற்றும் காணிக்கைகளினால் ஆஸ்திகளைச் சேர்த்து, தனது குடும்பத்தையும் பிள்ளைகளையும் நல்ல பொருளாதார நிலையில் வைத்துவிட்டார் எனக்கூறினார். தான் ஐசுவரியவான் ஆனதினால் இப்பொழுது அநேக ஏழை, எளிய விசுவாசிகளை கொத்தடிமைகளாக்கி அவர்களுக்கு மாதந்தோறும் வீட்டு வாடகை, பிள்ளைகளின் படிப்புச் செலவு, குடும்பச் செலவு என Rs.200/300 என உதவிகள் செய்து அவர்கள் தனது கூண்டைவிட்டு வெளியேறாதபடிச் செய்து, மக்களை ஆட்கொண்டு ஊழியம் செய்கிறார் என தனது அதிருப்திகளை என்னிடம் பகிர்ந்துக் கொண்டார்.

4. அடுத்த ஒரு வாரத்திற்குள் என்னைக் குறித்துக் கேள்விப்பட்ட, ஆனால் என்னை முகமுகமாகக் காணாத நம்முடன் விசுவாசத்திலுள்ள ஒரு ஊழியக்கார சகோதரன் என்னைக் காணக் கர்த்தருடைய வழிநடத்துதலின்படி வந்து தன் ஊழியத்தைக் குறித்துப் பேசிக் கொண்டிருந்தார். நாங்கள் அநேக ஆவிக்குரிய காரியங்களை ஒருவருக்கொருவர் பகிர்ந்துகொண்ட வேளையில் தசமபாகம் மற்றும் காணிக்கைகளும் அதில் இடம்பெற்றது. அவர் மதுரையில் நம்முடன் விசுவாசத்திலுள்ள ஒரு ஊழியக்காரரிடம் சில காலம் இருந்ததாகவும், அவருக்கு அவருடைய சபையில் பிரதிமாதம் குறைந்தது Rs.10,000/- தசமபாகம் மற்றும் காணிக்கைகள் வருவதாகவும், அதில் சுமார் Rs.7,000/- ஒரு பிளாட் கடனுக்கு வாங்கியதற்கு வட்டியாக செலுத்துவதாகக் கூறினார். கர்த்தருடைய தசமபாகம் வட்டி செலுத்த செலவிடப்படுகின்றதே என்பதை அறிந்து என்மனம் புண்பட்டது. கர்த்தருக்குரிய தசமபாகம் லேவியின் குடும்பத்தை போஷிக்கவேயன்றி சொத்து, ஆஸ்திகள், பங்களா, கார்கள் வாங்க இல்லையே, இந்த அநியாயத்தை என்ன என்று சொல்லுவது? தசமபாகம் கொடுக்கும் மக்களுக்கு அறிவில்லையே என அவர்களுக்காகப் பரிதாபப்பட்டேன்.

5. ஆக மேற்கூறிய இந்த மூன்று சம்பவங்களே நான் இங்குத் தசமபாகம் மற்றும் காணிக்கைகள் குறித்து எழுத எனக்குத் தூண்டுகோலாக இருந்தது. மேலும் நான் தசமபாகம் மற்றும் காணிக்கைகள் குறித்ததான காரியங்களை எழுதி முடித்து வெளியிட இதுவே கர்த்தருடைய ஏற்ற வேளையாயுமிருக்கிறது. இதை பிரிண்ட் செய்து வெளியிட நம்முடன் விசுவாசத்திலுள்ள, பணவசதிகள் உள்ள ஒரு சிலரை நாடினேன். அவர்கள் முன்வரவில்லை. ஆதலால் எனக்கு சத்தியத்தின்மேல் உள்ள வாஞ்சையினாலும், இந்தசெய்தி எப்படியும் ஒருசில ஊழியர்கள் மற்றும் விசுவாசிகளுடைய கரங்களை அடையவேண்டும் என்ற உறுதியுடன் இதை கம்ப்யூட்டர் பிரிண்ட் எடுத்து, பின் அதிலிருந்து ஜெராக்ஸ் நகல்கள் எடுத்து உங்களுக்கு அனுப்பிவைக்கிறேன். இதைப்பெறும் நீங்கள் தசமபாகம் மற்றும் காணிக்கைகள் குறித்ததான சத்தியத்தைப் பிறருடன் பகிர்ந்துக்கொள்ளுங்கள். இது அநேக ஆத்துமாக்களுக்குப் பிரயோஜனமா யிருக்குமென கிறிஸ்துவுக்குள் நம்புகிறேன்.

6. முதலாவது நாம் வாழும் இந்த லவோதிக்கேயா சபைக்காலம், சபைக்காலங்களுக்குள் மிக்க கொடிதான வஞ்சிப்பின் காலம் என்பதை அறியவேண்டும். வேறு எந்தவொரு சபைக்காலத்திலும் இப்படிப்பட்ட தான வஞ்சிப்பு கிடையாது. இந்தச் சபைக்காலத்தில் கள்ள கபடமுள்ள வேலையாட்கள், நீதியின் ஊழியக்காரர் களுடைய வேஷத்தைத்தரித்துக்கொண்டு, பொருளாசையில் நிறைந்து, தங்களைத்தாங்களே பாஸ்டர்களாக்கிக் கொண்டு பற்பல இடங்களுக்குச்சென்று தங்களது லௌகீக ஞானத்தினாலும், சாதுரியமான பேச்சினாலும் மக்களை நாடி வைராக்கியம் பாராட்டி, ஆங்காங்கு சபைகளையும், கிளைச்சபைகளையும் ஏற்படுத்தி, தங்களது ஊழியம் ஸ்திரப்பட்டவுடன் விசுவாசிகள் அவர்களை நாடி வைராக்கியம் பாராட்டும்படிச் செய்து, அவர்களை ஆட்கொண்டு, ஊழியத்தின் ஆரம்ப நாட்களில் சாப்பாட்டிற்கே கஷ்டப்பட்ட நிலையில் இருந்தவர்கள் ஐசுவரிய - வான்களாகி விடுகிறார்கள். கிறிஸ்தவ ஊழியம் இந்நாட்களில் நல்ல ஆதாயத்தைக் கொடுக்கும் ஒரு தொழிலாக மாறிவிட்டது. பிரயாசப்படுகிறவன் தனக்காகவே பிரயாசப்படுகிறான் என்ற வேதவாக்கியம் நூற்றுக்குநூறு உண்மையே. ஊழியத்தொடக்க நாட்களில் விசுவாசிகள் பின் ஊழியக்காரர்கள் ஓடினார்கள். ஊழியக்காரர்களின் பொருளாதார நிலை உயர்ந்தவுடன் விசுவாசிகள் ஊழியக்காரர்கள் பின் மாடு அடிக்கப்படும்படி செல்லுவது போலவும், ஒரு மூடன் விலங்கிடப்பட்டு தண்டனைக்குப் போவதுபோலவும், ஒரு குருவி தன் பிராணனை வாங்கும் கண்ணியை அறியாமல் அதில் விழத் தீவிரிக்கிறது போலவும் செல்லுகிறார்கள். ஊழியக்காரர்கள் அந்த அளவுக்கு விசுவாசிகளை வசீகரித்து விடுகிறார்கள். இதுதான் இன்றைய ஊழியங்களின் நிலை. ஊழியத்தின் பாதையில் தனக்கும், தன் பின்சந்ததியாருக்கும் கர்த்தருக்குரியவைகளைத் திருடி, ஆஸ்திகளையும் சொத்துக் களையும் சேர்க்கிறவர்கள்தான் இந்நாட்களில் பெரிய பிரபலமான ஊழியக்காரர்கள். இவர்களுடைய நிலையை யும், ஆதி சபைக்காலத்தில் ஊழியர்களுடைய நிலையையும் ஒப்பிட்டுப்பாருங்கள். அப்போஸ்தலனாகிய பவுலு க்கு அவனுடைய ஊழியத்தில் மிஞ்சினது ஒரு மேல் அங்கியும், சில புத்தகங்களுமே. 2தீமோ. 4:13. கர்த்தருடைய ஊழியம், கர்த்தருடைய ஊழியம் என முதலைக்கண்ணீர் வடித்து, ஊழியத்தின்பேரில் மக்களை ஏமாற்றி பணம் சம்பாதித்து, பங்களா, கார் வசதிகளுடன் ஆடம்பரமாக வாழ்க்கை வாழும் ஊழியக்காரர்களே உங்களுக்கு ஐயோ ! இவர்கள் தான் பவுல் 2தீமோ. 4:10ல் கூறும் தேமாக்கள் என்பதை மக்கள் என்று தங்கள் உள்ளத்தில் உணர்வார்களோ? இதை உணர, அவர்கள் கண்கள் திறக்கப்படும்படிக்கு, கண்களுக்கு கலிக்கம் போட வேண்டுமென்று அவர்களுக்கு ஆலோசனை சொல்லுகிறேன்.

7. **ஆவிக்குரிய கிறிஸ்தவர்களுக்கு தசமபாகம் எனபதன் பொருள் என்ன?**

தசமபாகம் என்பது பத்தில் ஒரு பங்கு ஆகும். ஒருவன் தனக்குச் சொந்தமான அசையும் மற்றும் அசையா சொத்துக்கள், தன் கைகளின் பிரயாசங்கள் அனைத்திலிருந்தும் கிடைக்கும் வருமானங்களி லிருந்து பத்தில் ஒரு பங்கைப் பிரித்தெடுத்து அதை கர்த்தருக்குச் செலுத்த வேண்டும். ஏனென்றால் அது கர்த்தருக்குரியது. அது கர்த்தருக்குப் பரிசுத்தமானது. அந்த பத்தில் ஒரு பங்கு மீது அவனுக்கு எந்தவிதமான உரிமையும் கிடையாது. அதன் மீது கர்த்தருக்கே முழு உரிமை உண்டு. பூமியும் அதன் நிறைவும் கர்த்தரு டையது. சங். 24:1. என் சம்பாத்தியமும், என் கைப்பெலனும் இந்த ஐசுவரியத்தை எனக்குச் சம்பாதித்தது என்று நீ உன் இருதயத்தில் சொல்லிக்கொள்ளாமலிருக்க எச்சரிக்கையாயிரு. உபா. 8:17. நமக்கு உண்டான வைகளெல்லாம், கர்த்தருடைய கரத்திலிருந்து நமக்கு வரும் ஈவு. எல்லாம் கர்த்தரால் உண்டானது. அவரது கரத்தினாலே வாங்கி, அவருக்குக் கொடுக்கிறோம். 1நாளா. 29:14.

8. வேலை செய்யும்படி கர்த்தர் மனுஷனை நியமித்தார். தேவனாகிய கர்த்தர் ஏதேன் என்னும் ஒரு தோட்டத்தை உண்டாக்கி, மனுஷனை அங்கு அழைத்துக்கொண்டு வந்து, அதை பண்படுத்தவும் காக்கவும் வைத்தார். ஆதி. 2:15. நீ பூமியிலிருந்து எடுக்கப்பட்டபடியால், நீ பூமிக்குத் திரும்புமட்டும் உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய். ஆதி. 3:19. ஒருவன் வேலை செய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாது என்று நாங்கள் உங்களிடத்தில் இருந்தபோது கட்டளையிட்டோமே. உங்களில் சிலர் யாதொரு வேலையுஞ் செய்யாமல் வீண் அலுவற்காரராய், ஒழுங்கற்றுத் திரிகிறார்களென்று கேள்விப் படுகிறோம். இப்படிப்பட்டவர்கள் அமைதலோடே வேலை செய்து; தங்கள் சொந்தச் சாப்பாட்டைச் சாப்பிட வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே அவர்களுக்கு கட்டளையிட்டுப் புத்தி சொல்கிறோமென அப்போஸ்தலனாகிய பவுல் தெசலோனிக்கேயா சபை விசுவாசிகளுக்கு எழுதுகிறான். 2தெச. 3:10-12. இவ்வாறாக

விசுவாசிகள் தங்கள் கைகளினால் வேலைசெய்து, அதன் பிரயாசத்தின் பலனை புசிக்கும்படி அறிவுறுத்தப்படுகிறார்கள். அவர்கள் அறிவுரை கூறுவதோடு மட்டும் நின்று விடாது, அவர்கள் கொடுத்த அறிவுரைக்கு ஏற்றாற்போல் நடந்து மாதிரி வாழ்க்கையும் வாழ்ந்துகாட்டினார்கள். இரவும்பகலும் பிரயாசத்தோடும் வருத்தத்தோடும் வேலைச் செய்துச் சாப்பிட்டார்கள். 2தெச. 3 : 8.

9. **தசமபாகம் குறித்து மக்கள் மத்தியில் பற்பல எண்ணங்கள், எண்ணங்களுக்கேற்ற போதனைகள் உண்டு. முதல் வகுப்பினர் தசமபாகம் கொடுப்பதை விசுவாசிக்கிறார்கள். தசமபாகம் கொடுக்கிறார்கள். இரண்டாம் வகுப்பினர் தசமபாகம் கொடுப்பது தேவையில்லை எனக் கூறி தசமபாகம் கொடுப்பதில்லை. மூன்றாம் வகுப்பினர் தசமபாகம் கொடுக்கவேண்டும் என்பதை உபதேசத்தின் அடிப்படையில் ஏற்றுக்கொள்வார்கள். ஆனால் கொடுக்கமாட்டார்கள். இவ்வாறாக தசமபாகம் கொடுப்பது குறித்து மக்கள் மத்தியில் விசுவாசிகள், அவிசுவாசிகள், பாவனை விசுவாசிகள் என்ற மூன்றுவகை விசுவாசிகள் உண்டு.**

10. **முதன்முதலாக தசமபாகம் கொடுத்தது யார்?** இந்தப் பெருமை கோத்திரத் தலைவனாகிய ஆபிரகாமைச் சேரும். உன்னதமான தேவனுடைய ஆசாரியனாயிருந்த சாலேமின் இராஜாவாகிய மெல்கிசேதேக்கு அப்பமும் திராட்சரசமும் கொண்டுவந்து, அவனை ஆசீர்வதித்து : வானத்தையும் பூமியையும் உடையராகிய உன்னதமான தேவனுடைய ஆசீர்வாதம் ஆபிராமுக்கு உண்டாவதாக, உன் சத்துருக்களை உன் கையில் ஒப்புக்கொடுத்த உன்னதமான தேவனுக்கு ஸ்தோத்திரம் என்று சொன்னான். இவனுக்கு ஆபிராம் எல்லாவற்றிலும் தசமபாகம் கொடுத்தான். எபி. 7:4, ஆதி. 14 : 18 - 20.

11. ஆபிரகாம் தசமபாகம் கொடுத்த சமயத்தில், அவனுக்கு தசமபாகம் கொடுப்பது குறித்து தேவனிடமிருந்து எந்தவிதமான கட்டளையோ, கற்பனையோ, பிரமாணமோ கிடையாது. ஆனாலும் தசமபாகம் கர்த்தருக்குரியது, அது அவருக்கு பரிசுத்தமானது, அதை அவருக்குச் செலுத்தவேண்டும் என்ற வெளிப்பாடு அவனுக்குக் கிடைத்தது. **வெளிப்பாடு என்பது விசுவாசம். விசுவாசம் உங்களுக்கு வெளிப்படும் ஒரு காரியமாகும். தேவன் ஆபிரகாம் உள்ளத்தில் தசமபாகம் கர்த்தருக்குரியது. அது அவருக்குப் பரிசுத்தமானது என்றதான விசுவாசத்தை தொடங்கினார். ஆக விசுவாசம் என்பது தேவனிடத்திலிருந்து கிடைக்கும் ஒரு வெளிப்பாடு ஆகும். விசுவாசத்தைத் துவக்குகிறவர் இயேசு.** எபி. 12:1. **விசுவாசம் ஆவியினுடைய ஒரு அநுக்கிரகம். ஆவியினுடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது.** 1கொரி. 12:9,7. **ஆவியினுடைய அநுக்கிரகங்களை, ஆவியானவர் தமது சித்தத்தின்படியே அவனவனுக்குப் பகிர்ந்துக் கொடுக்கிறார்.** 1கொரி. 12 : 11.

12. பாருங்கள், கர்த்தர் தமது சித்தத்தின்படியே, தமது கிருபையினால் ஒருவனுக்கு அதை வெளிப்படுத்துகிறார். அதற்கென்று அவன் ஒன்றுமே செய்யவேண்டியதில்லை. அவன் தன் சுயமுயற்சியினால் அதைப் பெற்றுக்கொள்ளவும் முடியாது. தேவனுடைய கிருபையினால் அது அவனுக்கு வெளிப்படுத்தப்படுகிறது. மாம்சமும் இரத்தமும் அதை அவனுக்கு வெளிப்படுத்தவில்லை. பரலோகத்திலிருக்கிற பிதா அதை அவனுக்கு வெளிப்படுத்துகிறார். உதாரணமாக **ஆபேல், காயீன் இருவரும் தேவனை ஆராதித்தார்கள். கர்த்தருக்கு காணிக்கைகளை இருவரும் கொண்டுவந்தார்கள். கர்த்தர் ஆபேலையும், அவன் காணிக்கையையும் அங்கீகரித்தார். ஆனால் காயீனையும், அவன் காணிக்கையையும் அங்கீகரிக்கவில்லை. ஏன்? ஆபேலுக்கு பலியில் இரத்தத்தின் முக்கியத்துவம் வெளிப்படுத்தப்பட்டது. ஆதலால் அவன் தன் மந்தைகளின் தலையீற்றுகளிலும், அவைகளில் கொழுமையானவைகளையும் கொண்டுவந்து, காயீனைக் காட்டிலும் மேன்மையான பலியைத் தேவனுக்குச் செலுத்தினான். பாருங்கள், அப்பொழுது ஆராதனைக்குரிய, பலிகளுக்குரிய முறைமைகள் எதுவுமில்லை, ஆபேல் பெற்றது ஒரு ஆவிக்குரிய வெளிப்பாடு. தன் பெற்றோரின் பாவம் இரத்தத்தினாலானது என்ற வெளிப்பாட்டைப் பெற்றான். இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவமன்னிப்பு இல்லை என்ற வெளிப்பாட்டை ஆபேல் பெற்றான்.**

13. இவ்வாறாக, **தசமபாகம் கொடுப்பது ஒரு வெளிப்பாடு ஆகும். இந்த வெளிப்பாட்டை, விசுவாசத்தைப் பெற்றவர்களே தசமபாகம் கொடுக்கிறார்கள்.** கர்த்தருடைய சிறுமந்தைக்கே இந்த வெளிப்பாடு தேவனிடத்திலிருந்து கிடைக்கிறது. அவர்கள் மட்டுமே, தசமபாகம் கொடுப்பதைத் தங்கள் பிரதானமானக் கடமையாகக் கருதி கர்த்தருக்குரியதைக் கர்த்தருக்கு அந்தந்த வேளைகளில் கொடுக்கிறார்கள். இவர்கள் தான் உண்மையான விசுவாசிகள்.

14. அவிசுவாசிகள் தசமபாகம் கொடுப்பதை விசுவாசிப்பதில்லை. அவர்களில் ஒரு பிரிவினர் தசமபாகம் கொடுக்கவேண்டும், கொடுக்கக்கூடாது என்ற தெளிவான கட்டளை சபைக்காலங்களில் இல்லை என்கிறார்கள். இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்து தேசத்தில் அந்நியரும், பரதேசிகளுமாயிருந்தார்கள். ஆதலால் அவர்கள் ஒடுக்கப்பட்டார்கள். கர்த்தர் அவர்கள் கூக்குரலைக்கேட்டார். எகிப்தியர்கள் அவர்களை ஒடுக்குகிற ஒடுக்குதலைக் கண்டார். அவர்களை மீட்க இரங்கினார். அவர்கள் மீட்கப்பட்டார்கள். பாலும் தேனும் ஓடுகிற கானான் தேசத்தில் அவர்கள் தங்கள் காணியாட்சிகளுடன் குடியிருந்தக் காலத்தில், தேவன் தம்முடைய ஜனங்கள் எகிப்தில் பட்ட கஷ்டங்களையும் பாடுகளையும் நினைவுகூர்ந்து, தேவன் தம்முடைய ஜனங்களிடமிருந்து தமக்குரிய தசமபாகத்தைப் பெற்று, அவர்கள் தேசத்திலுள்ள அந்நியரையும், பரதேசிகளையும், விதவை

களையும் போஷித்தார். இஸ்ரவேலின் கஷ்டத்தில் தேவன் அவர்களுக்கு உதவிய பிரகாரம் பிறர் கஷ்டத்திலும் இஸ்ரவேலர் அவர்களுக்கு உதவி செய்யவேண்டும் என்பதற்காகவே தேவன் அவர்களிடமிருந்து தசமபாகத்தை வாங்கினார். இன்றைய சூழ்நிலையில் நாம் அத்தகைய நிலையில் இல்லை. ஆதலால் தசமபாகம் கொடுக்க வேண்டியதில்லை என்று கூறி கர்த்தருக்குரியதை கர்த்தருக்கு கொடுக்க அவிசுவாசிகள் மறுக்கிறார்கள்.

15. அவிசுவாசிகளில் மற்றொரு பிரிவினர் பழைய ஏற்பாடு காலத்தில் ஆசாரியர்கள் ஆலயத்தில் பணிவிடை செய்தார்கள். அவர்களுக்கு, அவர்கள் சகோதரர்கள் மத்தியில் சுதந்தரம் கொடுக்கப்படவில்லை. கர்த்தரே அவர்களுக்குப் பங்கும் சுதந்தரமுமாயிருந்தார். ஆதலால் தேவன் ஜனங்களிடமிருந்து, அவர் அவர்களுக் குக் கொடுத்த ஆசீவாதங்களிலிருந்து, தமக்குரியத் தசமபாகத்தை வாங்கி ஆசாரிய வேலைசெய்யும் லேவியருக்குக் கொடுத்தார். ஆனால் லேவியர்கள் நம் மத்தியில் இல்லை. விசுவாசிகளாகிய நாம் அனைவரும் லேவியரும் ஆசாரியர்களுமாயிருக்கிறோம். மேலும் இன்று ஊழியர்கள் சொத்துச் சுகங்களையும், ஆஸ்திகளை யும் தங்கள் சமுதாயத்தில் உடையவர்களாயிருக்கிறார்கள். ஆதலால் அவர்களுக்குத் தசமபாகம் கொடுக்க வேண்டிய தேவையில்லை என்கிறார்கள். இந்த வாதம் சரியாகத்தான் தோன்றும். ஆனால் ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடுச் சம்பந்தப்படுத்திப் பார்க்கும்போது இந்த வாதம் தவறு என்பதுப் புலனாகும்.

16. **மூன்றாம் வகுப்பினர் தசமபாகம் கொடுப்பதை விசுவாசிப்பார்கள். ஆனால் தங்கள் விசுவாசத்தை கிரியைகளில் காட்டமாட்டார்கள். தசமபாகம் கொடுப்பது தங்களது கடமை என்ற உள் உணர்வு இருந்தும், அந்த கடமையை தட்டிக்கழித்து விடுவார்கள். பாருங்கள், கர்த்தர் இவர்கள் வாய்க்குச் சமீபமும், இவர்கள் உள்ளிந்திரியங்களுக்கோ தூரமுமாயிருக்கிறார். பிரியமானவர்களே வெளிப்புறம் வெள்ளையடித்தல் ஒரு வித்தியாசத்தையும் உண்டாக்குவதில்லை. அவர்கள் வெளிப்புறத்தில் எல்லா வகையிலும் உண்மையான விசுவாசிகளைப் போலவே காணப்படுகிறார்கள். ஆனால் அவர்களுக்குள் உள்ளது விசுவாசிக்காத ஆத்துமா. விசுவாசமும் கிரியையும் கணவனும் மனைவியும் போல் ஒருமித்து கிரியை செய்யவேண்டும். உங்களுக்கு விசுவாசம் உண்டு என்று நீங்கள் உரிமை கோரினால், உங்கள் விசுவாசத்தை நீங்கள் எப்படி காண்பிப்பீர்கள்? உங்கள் கிரியைகளினாலேயன்றி மற்றபடி உங்கள் விசுவாசத்தை நீங்கள் காண்பிக்க முடியாது. உங்களுக்கு விசுவாசம் இருக்குமானால், உங்களது கிரியைகள் உங்கள் விசுவாசத்தை விவாகம் பண்ணியுள்ளது. ஆதலால் ஒன்று மற்றொன்றை அடையாளம் காட்டும். நாம் எதை விசுவாசிக்கிறோமோ அதன்பேரில் செயல்பட அஞ்சினால், தவறினால், மனதில்லாதிருந்தால் நாம் அதை விசுவாசிக்கவேயில்லை. இவர்கள் தான் பாவனை விசுவாசிகள். இவர்கள் விசுவாசிப்பதுபோல் நாடகம் நடிப்பார்கள். ஆனால் உண்மையில் அதை விசுவாசிப்ப தில்லை. ஏனென்றால் அவர்களிடம் கிரியை இல்லை. சரியாக ஒரு காரியத்தைச் செய்ய அறிந்திருந்தும் அதைச் செய்யாமலிருப்பது அக்கிரமம். ஆக இந்த பாவனை விசுவாசிகள் அனைவரும் அக்கிரமச் செய்கைக் காரர்களே. ஆனாலும் இவர்கள் எங்களால் அது நடப்பிக்கப்படுகிறதே, இது நடப்பிக்கப்படுகிறதே எனக் கூறலாம். பாருங்கள், விசுவாசம் பெரிய காரியங்களை நடப்பிக்கும். ஆனால் அது ஆவிக்குரியதாயிராது. மத். 7 : 22,23.**

17. **தசமபாகத்துக்கடுத்த உபதேசம் என்ன?**

அ. **தேசத்திலே நிலத்தின் வித்திலும், விருட்சங்களின் கனிகளிலும் தசமபாகம் எல்லாம் கர்த்தருக்குரியது. அது கர்த்தருக்கு பரிசுத்தமானது. லேவி. 27:30. இதிலிருந்து தசமபாகம் ஒரு காலக் கட்டத்துக்குரியதாகத் தெரியவில்லை. அன்றும் தசமபாகம் கர்த்தருக்குரியது, பரிசுத்தமானது. அவ்வண்ண மாகவே அது இன்றும் கர்த்தருக்குரியது, பரிசுத்தமானது. அது எக்காலத்துக்குமுரியது. இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார் என விசுவாசிப்பவர்களுக்கு தசமபாகம் கொடுப்பது நேற்றும் இன்றும் என்றும் மாறாத பிரமாணமே.**

ஆ. **ஒருவன் தன் தசமபாகத்திலே எவ்வளவாவது மீட்டுக்கொள்ள மனதாயிருந்தானானால், அத்துடன் ஐந்தில் ஒரு பங்கைக் கூட்டிக் கொடுக்கக்கடவன். லேவி. 27:31. ஒருவன் தன் தசமபாகத்தில் ஏதோ ஒரு பங்கை அல்லது முற்றிலுமாக கொடுக்கவேண்டிய சமயத்தில் கொடுக்காமல், அதை நிறுத்தி வைத்துக்கொண்டால் அவன் தன் தசமபாகத்தை மறுமுறை கொடுக்கும் சமயம் நிறுத்திவைத்த பங்குடன் ஐந்தில் ஒரு பங்கைக் கூட்டிக் கொடுக்கவேண்டும். உதாரணமாக ஒருவனுடைய மாத வருமானம் ரூ.10,000/- என வைத்துக்கொள்வோம். இதில் பத்தில் ஒரு பங்கு ரூ.1,000/- அது கர்த்தருக்குரியது. ஏதோ ஒரு சூழ்நிலையின் நிமித்தமாக கொடுக்கவேண்டிய ரூ.1,000/- தசமபாகத்தை கொடுக்காமல், அதை அடுத்த முறை கொடுத்து விடலாம் என நினைத்து, அந்த ரூ.1,000/- த்தையும் தன் சுய உபயோகத்துக்காக வைத்துக் கொண்டான். அப்படிப்பட்ட சூழ்நிலையில், அவன் அடுத்த முறை தன் தசமபாகத்தைச் கொடுக்கும் போது முன்பு கொடுக்கத் தவறிய ரூ.1,000/- மற்றும் அத்துடன் அதில் ஐந்தில் ஒரு பாகம் ரூ.200/- ஆக ரூ.1200/- ஐ இப்பொழுது கொடுக்கும் தசமபாகம் ரூ.1,000/- டன் சேர்த்து ரூ.2,200/- ஆக கொடுக்கவேண்டும்.**

இ. **இது தேவனாகிய கர்த்தருடைய கட்டளையும், நியாயமுமாயிருப்பதினால் ஒருவனும் இதை மீறவும் கூடாது. உபா. 26:13. இதை ஒருவனும் மறக்கவும் கூடாது. உபா. 26:13. இதை ஒவ்வொருவனும் தன் முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும் காத்து நடக்கவேணண்டும். உபா. 26 : 16.**

ஈ. **என் ஆலயத்திலே ஆகாரம் உண்டாயிருக்கும்படித் தசமபாகங்களையெல்லாம் பண்ட சாலையிலே கொண்டுவாருங்கள். மல். 3 : 10.**

18. **கர்த்தர் தம்முடைய ஜனங்களிடமிருந்து ஏன் தசமபாகம் கேட்டார்? இது கர்த்தருடைய ஜனங்கள் கர்த்தருக்கு எப்பொழுதும் பயந்திருக்கப் பழகும்படிக்கு ஆகும்.** உபா. 14:22. ஆதலால் தசமபாகம் கொடுப்பது, தேவனாகிய கர்த்தருக்கு பயந்திருக்கும் ஒவ்வொருவனுடைய வாழ்க்கை அனுபவமாகும். மாம்சத்துக் குரிய இஸ்ரவேலர் மட்டும்தானா கர்த்தருக்கு எப்பொழுதும் பயந்திருக்கவேண்டும்? ஆவிக்குரிய இஸ்ரவேலராகிய நாம் எப்பொழுதும் கர்த்தருக்குப் பயந்திருக்கவேண்டாமா? ஆதலால் **தசமபாகம் கொடுப்பது ஒரு குறிப்பிட்ட மக்களுக்கு மட்டுமல்ல, அது கர்த்தருக்கு பயந்து நடக்கிற மனுக்குலத்துக்கு ஆகும். மேலும் அது ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்துக்குரியது அல்ல. மாறாக அது எக்காலத்துக்குமுரியதாகும். ஆதலால், அன்றும் இன்றும் என்றும் கர்த்தருக்கு பயந்து நடக்கிற ஜனங்கள் கர்த்தருக்குரிய தசமபாகத்தை கர்த்தருக்குக் கொடுக்கவேண்டும்.**

19. தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள். எல்லா மனுஷர்மேலும் விழுந்த கடமை இதுவே. பிர. 12:13. நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் அன்பு கூறுவதாகும். அவருடைய கற்பனைகள் பாரமானவைகளுமல்ல. 1யோ. 5:3. ஆக, கர்த்தருடைய கற்பனை களுக்குக் கீழ்ப்படிகிறவன், கர்த்தரிடத்தில் அன்பு செலுத்துகிறான். கர்த்தரிடத்தில் அன்புச் செலுத்துகிறவன் கர்த்தருக்குரியத் தசமபாகத்தை கர்த்தருக்குச் செலுத்துகிறான். இதில் பழைய ஏற்பாடு காலம், புதிய ஏற்பாடு காலம்; இஸ்ரவேலர், புறஜாதி; மாம்சத்துக்குரிய இஸ்ரவேலர், ஆவிக்குரிய இஸ்ரவேலர் என்ற பாகுபாடே கிடையாது.

20. சிலர் தசமபாகம் கொடுக்க தங்களிடம் போதுமான வருமானம் இல்லை எனக்கூறிப் புலம்புகிறார்கள். இதோ பாருங்கள், எங்களது மாத வருமானம் ரூ.2,000/- தான், குடும்பத்தில் இத்தனைபேர் உண்டு, இந்த வருமானத்தைக் கொண்டு குடும்பத்தை மிக்க கஷ்டத்தின் மத்தியில்தான் நடத்தி வருகிறோம் என அங்கலாய்த்து, இதில் எப்படி நாங்கள் தசமபாகம் கொடுக்கமுடியும் என்கிறார்கள். எங்களுக்கு தசமபாகம் கொடுக்க விருப்பம்தான், தசமபாகம் கொடுப்பதற்குரிய வருமானம் எங்களிடத்தில் இல்லை என்கிறார்கள். இது தவறு. உனக்கு கிடைத்துக் கொண்டிருக்கும் மாத வருமானம் ரூ.2,000/- கர்த்தர் உனக்குக் கொடுத்தது தான். கர்த்தர் பிரதிமாதம் ரூ.2,000/- உனக்குக் கொடுத்து, என் கிருபை உனக்குப்போதும் என்கிறார். இதில் ரூ.200/- அவருக்குரியது. நீ அவருடைய இந்த ரூ.200/- ஐ திருடிக்கொண்டு ஒப்பாரி வைப்பது எவ்விதத்திலும் நியாயம் இல்லை. அவரிடமிருந்து பிரதிமாதம் ரூ.2,000/- வாங்கத் தெரிகிறது, ஆனால் அதில் அவருக்குரிய ரூ.200/- ஐ திருப்பிக்கொடுக்க உனக்கு மனம் இல்லையே. அப்படியானால் நீ யார்? ஒரு திருடன்தானே. நீ தேவனை வஞ்சிக்கிறவன்தானே. அப்படியிருக்க உன்னைத் தேவன் மேலும் எப்படி ஆசீர்வதிப்பார்? கொஞ்சத்தில் உத்தமமும் உண்மையும் இல்லாத நீ எப்படி அநேகத்தில் உத்தமமும் உண்மையுமாயிருப்பாய்? ஆதலால் சகோதரனே, உன்னை நீ சீர்தூக்கிப் பார்த்து கர்த்தருக்குரியதை முதலில் கர்த்தருக்குக் கொடு. பின் அவர் உன் தேவைகள் அனைத்தையும் ஏற்ற வேளைகளில் சந்திக்க வல்லவராயிருக்கிறார்.

21. **தசமபாகத்தை எங்கு கொண்டு செல்லவேண்டும்?**

அ. உங்கள் தேவனாகிய கர்த்தர் தமது நாமம் விளங்கும்படி தெரிந்துகொள்ளும் ஓர் இடம் உண்டாயிருக்கும். அங்கே நீங்கள் நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் ..... தசமபாகங்களை யும் ..... கொண்டுவாருங்கள். உபா. 12 : 11, 14 : 23.

ஆ. மூன்றாம் வருஷத்தின் முடிவிலே அவ்வருஷத்தில் உனக்கு வந்த பலன் எல்லாவற்றி லும் தசமபாகத்தைப் பிரித்து உன் வாசல்களில் வைக்கக்கடவாய். உபா. 14 : 28.

இ. தேவனுடைய ஆலயத்திலுள்ள பொக்கிஷ அறைக்கு கொண்டு வந்தார்கள். நெகே.10:38. கர்த்தருடைய ஆலயத்துக்கு கொண்டுவந்தார்கள். 2நாளா.31:5-10. என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படித் தசமபாகங்களையெல்லாம் பண்டசாலையிலே கொண்டுவாருங்கள். மல்.3:10, நெகே.13:5,12.

22. **ஆவிக்குரிய இஸ்ரவேலராகிய நமக்கு பண்டசாலை எது?** அது நாம் ஓரிடத்தில் கூடி ஆவிக்குரிய மன்னாவைப் பெறும் சபை கூடும் இடமாகும். விசுவாசிகள் தங்கள் தசமபாகத்தையும் காணிக்கை களையும் சபை கூடும் இடத்திற்கே கொண்டு செல்லவேண்டும்.

23. **தசமபாகத்தை என்ன செய்யவேண்டும் என்று கர்த்தர் கட்டளையிட்டார்?**

அ. உங்கள் தேவனாகிய கர்த்தர் தம்முடைய நாமம் விளங்கும்படி தெரிந்துகொள்ளும் ஸ்தலமாகிய அவருடைய வாசஸ்தலத்தையே நாடி, அங்கே போய் உங்கள் தசமபாகங்களைக் கொண்டுவந்து, அங்கே உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களை ஆசீர்வதித்ததுமான யாவுக்காகவும் நீங்களும் உங்கள் குடும்பத்தாரும் சந்தோஷப்படுவீர்களாக. உபா. 12 : 5 - 7.

ஆ. உங்கள் தேவனாகிய கர்த்தர் தமது நாமம் விளங்கும்படி தெரிந்துகொள்ளும் ஓர் இடம் உண்டாயிருக்கும், அங்கே நீங்கள் நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் .... உங்கள் தசமபாகங் களையும்..... கொண்டுவந்து உங்கள் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் நீங்களும், உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும், உங்கள் வேலைக்காரரும், உங்கள் வேலைக்காரிகளும், உங்களோடு பங்கும் சுதந்தர மும் இல்லாமல் உங்கள் வாசல்களில் இருக்கிற லேவியனும் சந்தோஷப்படுவீர்களாக. உபா. 12 : 11 , 12.

இ. லேவியனுக்கு உன்னோடே பங்கும் சுதந்தரமும் இல்லாதபடியால் அவனை கைவிடா யாக. மூன்றாம் வருஷத்தின் முடிவிலே அவ்வருஷத்தில் உனக்கு வந்த பலன் எல்லாவற்றிலும் தசமபாகத்தைப் பிரித்து, உன் வாசல்களில் வைக்கக்கடவாய். லேவியனுக்கு உன்னோடே பங்கும் சுதந்தரமுமில்லாதபடியால், அவனும், உன் வாசல்களில் இருக்கிற பரதேசியும், திக்கற்றவனும், விதவையும் வந்து புசித்து திருப்தியடைவார் களாக. உபா. 14:27-29, 26:12.

24. **தசமபாகம் லேவிக்கு ஏன் கொடுக்கப்படவேண்டும்?**

அ. இஸ்ரவேல் புத்திரரில் கர்ப்பந்திறந்து பிறக்கிற முதற்பேறான யாவுக்கும் பதிலாக, நான் லேவியரை இஸ்ரவேல் புத்திரரில் இருந்து எடுத்துக்கொண்டேன். அவர்கள் என்னுடையவர்களாயிருக்கிறார் கள். முதற்பேறானவையெல்லாம் என்னுடையவை. எண். 3:12,13,41,45. ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும் ஆசாரிய ஊழியம் கொடுக்கப்பட்டது. எண். 18:1. யாத். 28:1, 30:30, 2நாளா. 13:10. லேவியர்களை கர்த்தருக்கு அசைவாட்டப்படும் காணிக்கையாக்கி அவர்கள் இஸ்ரவேல் புத்திரரிலிருந்துப் பிரித் தெடுக்கப்பட்டார்கள். லேவியர் கர்த்தருடையவர்கள். எண். 8:13,14. ஆரோனின் தகப்பனாகிய லேவியின் கோத்திரத்தாரான அவன் சகோதரரையும் அவனோடே கூடி இருக்கவும் அவனிடத்திலே சேவிக்கவும் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். எண். 18:2, 3:6. உன் தேவனாகிய கர்த்தர் தமக்கு ஆராதனை செய்யவும், கர்த்தருடைய நாமத்தினாலே ஆசீர்வதிக்கவும் லேவியின் குமாரராகிய ஆசாரியரைத் தெரிந்துகொண்டார். உபா. 10:8,9, 21:5. லேவியராகிய ஆசாரியருக்கும், லேவி கோத்திரத்தில் அனைவருக்கும் இஸ்ரவேல் புத்திரருடன் பங்கும் சுதந்தரமும் இல்லை. கர்த்தருக்கு இடப்படும் தகனப்பலிகளும், அவருக்குச் சுதந்தரமானவை -களும் அவர்கள் புசிக்கக் கொடுக்கப்பட்டுள்ளது. அவர்கள் சகோதரர்களுக்குள்ளே அவர்களுக்குச் சுதந்தரமுமில்லை; கர்த்தரே அவர்கள் சுதந்தரம். உபா. 18:1,2. லேவியின் புத்திரர் ஆசரிப்புக் கூடாரத்தின் பணிவிடையைச் செய்கிற அவர்களுடைய வேலைக்காக இஸ்ரவேலருக்குள்ளானவைகள் எல்லாவற்றிலும் தசமபாகத்தை அவர்களுக்குச் சுதந்தரமாகக் கர்த்தர் கொடுத்தார். எண். 18:21. லேவியனைக் கைவிடக்கூடாது. உபா. 12:19 , 14:27.

ஆ. இஸ்ரவேல் புத்திரர் தங்கள் காணியாட்சியாகிய சுதந்தரத்திலே லேவியருக்குக் குடி யிருக்கும்படி பட்டணங்கள் கொடுக்கவேண்டும். மேலும் அந்தப் பட்டணங்களைச் சூழ்ந்திருக்கிற வெளி நிலங்களையும் லேவியருக்குக் கொடுக்கவேண்டும். எண். 35:2,3. தசமபாகம் மட்டும் அல்லாது பலியில் ஒரு பாகம் மற்றும் முதற்பலன் யாவும் லேவிக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. உபா. 18:3,4.

இ. **கர்த்தர் ஆரோனை நோக்கி, அவர்களுடைய தேசத்திலே நீ ஒன்றையும் சுதந்தரித்துக் கொள்ளவேண்டாம். அவர்கள் நடுவிலே உனக்கு பங்கு உண்டாயிருக்கவும் வேண்டாம். இஸ்ரவேல் புத்திரர் நடுவில் நானே உன் பங்கும், உன் சுதந்தரமுமாயிருக்கிறேன் என்றார். இதோ, லேவியின் புத்திரர் ஆசரிப்புக் கூடாரத்தின் பணிவிடையைச் செய்கிற அவர்களுடைய வேலைக்காக இஸ்ரவேலுக்குள்ளே எல்லாவற்றிலும் தசமபாகத்தை அவர்களுக்குச் சுதந்தரமாய் கொடுத்தேன் என்றார். எண். 18:20,21.** வேலையாள் தன் கூலிக்குப் பாத்திரவானாயிருக்கிறான். லூக். 10:7 , 1தீமோ. 5:18. லேவியர் மாத்திரம் ஆசரிப்புக் கூடாரத்துக்கடுத்த வேலைகளைச் செய்யவேண்டும் அவர்கள் தங்கள் அக்கிரமத்தைச் சுமப்பார்கள். இஸ்ரவேல் புத்திரர் நடுவே அவர்களுக்குச் சுதந்தரமில்லை என்பது உங்கள் தலைமுறைதோறும் நித்திய கட்டளையாயிருக்கும். எண். 18:23. இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு ஏறெடுத்துப் படைக்கும் படைப்பாகிய தசமபாகத்தை லேவியருக்கு தசமபாகமாகக் கொடுத்தேன். ஆகையால் இஸ்ரவேல் புத்திரர் நடுவிலே லேவியருக்குச் சுதந்தரமில்லை. எண். 18:24. இக்காரணத்தினால் லேவி கோத்திரத்துக்கு மோசே சுதந்தரம் கொடுக்கவில்லை. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் அவர்களுக்குச் சொல்லியிருக்கிறபடி கர்த்தரே அவர்களுடைய சுதந்தரம். லேவியின் புத்திரரில் ஆசாரியத்துவத்தை அடைகிறவர்களும், ஆபிரகாமின் அரையிலிருந்து வந்த தங்கள் சகோதர ரான ஜனங்களின் கையிலே நியாயப்பிரமாணத்தின்படி தசமபாகம் வாங்குகிறதற்குக் கட்டளைப் பெற்றிருக்கிறார்கள். எபி. 7 : 5.

25. **இஸ்ரவேலில் உள்ள அந்நியனையும், திக்கற்ற பிள்ளைகளையும், விதவைகளையும் தேவன் ஏன் தம்முடைய தசமபாகத்தினால் போஷித்தார்?** தேவனாகிய கர்த்தருடைய ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜனமுமாகிய இஸ்ரவேல் எகிப்திலே அந்நியராயிருந்தார்கள். யாத். 22:21. அவர்கள் அங்கே பரதேசிகளா யிருந்தார்கள். உபா. 23:7. அவர்கள் அங்கே ஒடுக்கப்பட்டார்கள். யாத். 3:9, 1:11. கர்த்தர் அவர்களை மீட்டார். இதை நினைவு கூறவே, கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர் மத்தியில் உள்ள அந்நியரையும், திக்கற்ற பிள்ளைகளையும், விதவைகளையும் ஆதரிக்கிறார். இதற்கு எடுத்துக்காட்டு, ஒருவன் கஷ்டப்பட்ட நேரத்தில் அவன் மற்றொருவனால் ஆதரிக்கப்பட்டான். காலம் மாற அன்று கஷ்டப்பட்டவன் இன்று நல்ல நிலையில் உள்ளான். ஆதலால் அவன் தன் பழைய கஷ்ட நிலையை உணர்ந்து, இன்று கஷ்ட நிலையில் உள்ள மக்களை ஆதரிக்கிறான். சிறுமைப்பட்டவர்களுக்கு உதவிசெய்யவே நாம் வேலை செய்கிறோம். எபே. 4:28. நாம் பதினாயிரம் தாலந்து கடன் பட்டவனைப்போல் இருக்கவேண்டாம் மத். 18:23-35. நாம் ஒருவரிலொருவர் இரக்கக்குணமுள்ளவர்களாய் இருக்கவேண்டும்.

26. **முற்பிதாக்கள் தசமபாகம் கொடுத்தார்கள்.** முற்பிதாக்கள் தங்கள் வருவாய் யாவற்றிலு மிருந்துத் தசமபாகம் கொடுத்தார்கள். கோத்திரத்தலைவனாகிய ஆபிரகாம் உன்னதமான தேவனுடைய ஆசாரியனாயிருந்த சாலேமின் இராஜாவாகிய மெல்கிசேதேக்குக்கு எல்லாவற்றிலும் தசமபாகம் கொடுத்தான். இராஜாக்களை முறியடித்து வந்த ஆபிராமுக்கு மெல்கிசேதேக்கு அப்பமும், திராட்சரசமும் கொண்டுவந்து,

அவனை ஆசீர்வதித்து, வானத்தையும் பூமியையும் உடையவராகிய உன்னதமான தேவனுடைய ஆசீர்வாதம் ஆபிராமுக்கு உண்டாவதாக, உன் சத்துருக்களை உன் கையில் ஒப்புக்கொடுத்த உன்னதமான தேவனுக்கு ஸ்தோத்திரம் என்று சொன்னான். அவனுக்கு ஆபிராம் எல்லாவற்றிலும் கட்டாயமாக அல்ல, பிரமாணத்தின் கீழ் அல்ல, மனப் பூர்வமாக உற்சாகத்துடன் தசமபாகம் கொடுத்தான். ஆதி. 14 : 18 - 20.

27. **ஆபிரகாம் மெல்கிசேதேக்குக்கு ஏன் தசமபாகம் கொடுத்தான்?** வானத்தையும் பூமியையும் உடையவராகிய உன்னதமான தேவன் தன்னுடைய சத்துருக்களை தன் கையில் ஒப்புக்கொடுத்ததற்கு ஸ்தோத்திரம் செலுத்தி, தன் வருவாய் அனைத்திலும் தசமபாகம் கொடுத்தான். அதாவது நன்றிக்கடனைச் செலுத்தினான். தேவன் அவனுக்குச் செய்த உதவிக்கு அவனிடமிருந்து பிரதிபலன் எதுவும் எதிர்பார்க்கவில்லை. ஆனாலும் ஆபிராம் உள்ளத்தில் உணர்த்தப்பட்டு, தானாகவே முன்வந்து நன்றிக்கடனாகத் தசமபாகம் கொடுத்தான். நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள். அப்படியானால் நீங்கள் ஆபிரகாமின் பிள்ளைகளாயிருந்து ஆபிரகாமின் கிரியைகளைச் செய்யுங்கள். கலா. 3:29 , யோ. 8:39. கர்த்தர் உங்கள் கைகளின் பிரயாசங்களை ஆசீர் வதித்ததற்கு நன்றிக்கடனாகத் தசமபாகம் கொடுங்கள். அப்பொழுது நீங்களும் ஆபிரகாமின் கிரியைகளைச் செய்தவர்களாயிருப்பீர்கள். சுகமான பத்து குஷ்டரோகிகளில் ஒரு சமாரியன் மாத்திரம் நன்றியுள்ளவனாக இருந்தான். நாமும் அவ்வாறு நன்றியுள்ளவர்களாயிருப்போம். லூக். 17:15,16. கடைசி நாட்களில் மனிதர்கள் தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து நன்றியறியாதவர்களும், பணப்பிரியருமாயிருப்பார்கள் என வேதம் கூறுகிறது. 2தீமோ. 3:2,5. மேற்கூறிய வசனங்களைக் கொண்டு நீங்கள் எப்படிப்பட்டவர்கள், நன்றி உள்ளவர்களா அல்லது நன்றி இல்லாதவர்களா என்பதை நீங்களே நிதானித்துக்கொள்ளுங்கள்.

28. யாக்கோபும் தேவரீர் எனக்குத் தரும் எல்லாவற்றிலும் தசமபாகம் செலுத்துவேன் என பொருத்தனைப் பண்ணினான். ஆதி. 28 : 22.

29. நெகேமியாவின் நாட்களில் லேவியருக்கு அவர்கள் பங்குக்கொடுக்கப்படவில்லை. ஆதலால் பணிவிடை செய்கிற லேவியரும் பாடகரும் அவரவர் தங்கள் வெளி நிலங்களுக்கு ஓடிப்போனார்கள். இதை அறிந்த நெகேமியா ஜனங்களிடமிருந்து தசமபாகத்தைப் பெற்று, ஓடிப்போன லேவியரையும் பாடகரையும் திரும்ப வரவழைத்து அவர்களைப் போஷித்தான். நெகே. 13 : 10-13.

30. எசேக்கியா இராஜா ஆசாரியரும் லேவியரும் கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தை உற்சாக மாகக் கைக்கொள்ளும்படி, அவர்களுக்குரிய பாகத்தைக் கொடுக்க ஜனங்களுக்கும், எருசலேமின் குடிகளுக்கும் கட்டளையிட்டான். அந்த வார்த்தை பிரசித்தமானபோது இஸ்ரவேல் புத்திரர் தானியத்திலும், திராட்சரசத்திலும், எண்ணெயிலும், தேனிலும், நிலத்தின் எல்லாவற்றிலும் முதற்பலன்களையும் திரளாய்க் கொண்டுவந்து சகலத்திலும் தசமபாகத்தைப் பரிபூரணமாய்க் கொடுத்தார்கள். 2நாளா. 31:4,5 , 1சாமு. 8:15,17.

31. **லேவியும் தசமபாகம் கொடுத்தான்**. தசமபாகம் வாங்கும் லேவியரும் தாங்கள் வாங்கிய தசம பாகத்திலிருந்து தசமபாகத்தை கர்த்தருக்கென்று கொடுக்கவேண்டும். பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி, நீ லேவியரோடே சொல்லவேண்டியது என்னவென்றால் இஸ்ரவேல் புத்திரரின் கையால் வாங்கிக்கொள்ளும்படி நான் உங்களுக்குச் சுதந்தரமாகக் கொடுத்த தசமபாகத்தை நீங்கள் அவர்கள் கைகளில் வாங்கும்போது தசமபாகத் தில் பத்தில் ஒரு பங்கை கர்த்தருக்கென்று ஏறெடுத்துப்படைக்கும் படைப்பாகச் செலுத்தவேண்டும் என்றார். எண். 18:26. ஆக தசமபாகம் வாங்கும் லேவியனும் தசமபாகம் செலுத்தினான். எபி. 7:10. லேவி ஆபிரகாமின் அரையிலிருந்தபோது தசமபாகம் கொடுத்தான். லேவி ஆபிரகாமுக்கு நான்காவது தலைமுறைக்குப் பிறகு தோன்றினான். ஆபிராம் மெல்கிசேதேக்குக்குத் தசமபாகம் கொடுத்தபோது அது நான்காம் தலைமுறையில் பிறந்த லேவியின் கணக்கில் எடுக்கப்பட்டது. அப்பொழுது அவன் ஆபிரகாமின் அரையிலிருந்தான். எபி. 7:9. தசமபாகத்தில் செலுத்தப்படும் தசமபாகம் தேவனுடைய ஆலயபொக்கிஷத்தில் சேர்க்கப்பட்டது. நெகே. 10:37,38.

32. ஆசாரியர்களும் தசமபாகத்திலிருந்து தங்களை போஷித்து பின்னும் மீதம் வைத்தார்கள். 2நாளா. 31:10. தசமபாகம் மீதத்தை பண்டசாலையிலே வைத்தார்கள். 2நாளா. 31:11. தேவைக்கும் மேல் இருந்ததினால் அதைக்கொண்டு அவர்கள் தங்கள் வாழ்க்கை வசதிகளை அதிகரிக்கவில்லை.

33. **தசமபாகம் பழைய ஏற்பாடு காலத்துக்கு மட்டும்தானா? அது புதிய ஏற்பாடு காலத்துக்கு அதாவது சபைக்காலத்துக்கு பொருந்தாதா?**

அ. முதலாவது நீங்கள் அறிந்துகொள்ள வேண்டியது புதிய ஏற்பாட்டின் நிழல்தான் பழைய ஏற்பாடு. புதிய ஏற்பாட்டை பிரதிபலிப்பதுதான் பழைய ஏற்பாடு. பாருங்கள், அவர்களெல்லாரும் விசுவாசத்தினாலே நற்சாட்சிப் பெற்றும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை அடையாமற் போனார்கள். அவர்கள் நம்மையல்லாமல் பூரணராக முடியாது. எபி. 11:39,40. ஆதலால் பழைய ஏற்பாடு காலத்துக்குத்தான் தசமபாகம் என்றால் அது புதிய ஏற்பாட்டின் நிழல்தான். ஆதலால் புதிய ஏற்பாடு, சபைக்காலத்துக்குரியதுதான் தசமபாகம்.

ஒருவன் தசமபாகம் கொடுப்பதின் மூலம் முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுகிறான். மத். 6:33.

ஆ. தசமபாகம் இஸ்ரவேலருக்கு மட்டுமேயன்றி நமக்குக்கிடையாது என்ற உபதேசம் உண்டு. ஆனால் இந்த உபதேசத்தை நிலைநிறுத்த இவர்கள் தேவனுடைய வார்த்தையிலிருந்து ஆதாரங்கள் எடுத்துக்காட்ட முடியாது. கிறிஸ்துவுக்குள்ளானவர்கள் ஆவிக்குரிய இஸ்ரவேலரே. ரோ. 2:25-29. இஸ்ரவேலரைக் குறித்து; சில கிளைகள் முறித்துப் போடப்பட்டிருக்க, அதாவது அவிசுவாசத்தினால் பிரிந்து போன இஸ்ரவேலர்கள் ரோ. 11:20 , காட்டொலிவ மரமாகிய நீ (நாம் - புறஜாதி) அவர்கள் இருந்த இடத்தில் ஒட்டவைக்கப்பட்டு, ஒலிவ மரத்தின் (இயேசு) வேருக்கும் சாரத்துக்கும் உடன் பங்காளியாயிருக்கிறாய். ரோ. 11:13-19. பாருங்கள் நாம் இஸ்ரவேலருடன் பங்காளிகளானதால் அவர்களுக்குரிய கட்டளை, பிரமாணம் நமக்கும் உண்டு. ரோ. 2:25-29. அவர்கள் மாம்சத்துக்குரிய இஸ்ரவேலர், நாம் ஆவிக்குரிய இஸ்ரவேலர்.

இ. இதற்கு உதாரணமாக பத்துக் கற்பனைகளை எடுத்துக்கொள்ளுங்கள். இவைகள் புதிய ஏற்பாடு, சபைக்காலத்தில் நமக்கும் கொடுக்கப்பட்டுள்ளது. நீங்கள் 1யோ. 5:21, எபே. 6:1-3, ரோ. 13:8-10 வசனங்களை தியானித்தால், பரிசுத்த ஓய்வுநாள் தவிர இதர ஒன்பது கற்பனைகளும் இதில் இடம் பெற்றுள்ளதைக் காணலாம். மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில் நியாயப் பிரமாணத்தின் நீதிநிறைவேறும்படிக்கு ரோ. 8:4, கர்த்தருக்குரியத் தசமபாகத்தை நாம் கண்டிப்பாகக் கொடுக்கத் தான் வேண்டும்.

ஈ. பழைய ஏற்பாடு காலத்தில் தசமபாகம் லேவியருக்குரியது. ஆனால் மெல்கிசேதேக் முறைமையின்படி வேறொரு ஆசாரியர் எழும்பியுள்ளதால், லேவிய முறைப்படியான ஆசாரியத்துவம், நியாயப் பிரமாணம் மாற்றப்பட்டது. எபி. 7:11-14. இதன்படி இன்று சபை பக்திவிருத்திக்காகக் கர்த்தர் ஐந்துவகை ஊழியங்களை ஏற்படுத்தியுள்ளார். ஆதலால் கர்த்தருக்குரியத் தசமபாகம் சபைக்காலத்தில் அதன் ஐந்து வகை ஊழியங்களுக்கும் உரியதாகும். கர்த்தருக்குரியத் தசமபாகத்தின் மீது தனிப்பட்ட ஒரு ஊழியம் மட்டும் உரிமைகோர முடியாது. ஆனால் இந்நாட்களில் சபைக்கு வரும் கர்த்தருக்குரியத் தசமபாகத்தைப் பாஸ்டர் மட்டுமே தனக்குரியதாக எடுத்துக்கொள்வது கர்த்தரை வஞ்சிப்பதாகும். அவன் ஒரு திருடன்.

உ. ஆவிக்குரிய இஸ்ரவேலராகிய நாம் மாம்சத்துக்குரிய இஸ்ரவேலர் போன்று எகிப்தில் அடிமைகளாக இல்லாவிட்டாலும், முற்காலத்திலே இவ்வுலக வழக்கத்திற்கேற்றபடியாக நமது மாம்ச இச்சைகளின்படியே நடந்து மாம்சமும் மனதும் விரும்பினவைகளைச் செய்து, சுபாவத்தினாலே மற்றவர்களைப் போலக் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம். தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்பு கூர்ந்து தம்முடைய மிகுந்த அன்பினாலே, அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனே கூட உயிர்ப்பித்தார். கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டோம். இது தேவனுடைய ஈவு. எபே. 2:1-8. மாம்சத்துக்குரிய இஸ்ரவேலர் தேவனுடைய அன்பினால், இரக்கத்தினால் மீட்கப்பட்ட ஜனங்கள். அதற்கு நன்றிக்கடனாக கர்த்தருக்குரியத் தசமபாகத்தைச் செலுத்தினார்கள். ஆனால் நாமோ இயேசு கிறிஸ்து வினுடைய, தேவனுடைய சுய இரத்தத்தினாலே மீட்கப்பட்டோம். அவர்களை மீட்க தேவன் தம்முடைய இரத்தத்தை சிந்தவில்லை, ஆனால் நம்மைஇரட்சிக்கவே தேவன் தம்முடைய இரத்தத்தைச் சிந்தினார். ஆதலால் அன்பினால், இரக்கத்தினால் மீட்கப்பட்ட மாம்சத்திற்குரிய இஸ்ரவேலர் தசமபாகம், காணிக்கைகள் செலுத்தியது போன்று அல்ல, **தேவனுடைய சுய இரத்தத்தினாலே மீட்கப்பட்ட ஜனமாகிய ஆவிக்குரிய இஸ்ரவேலராகிய நாம் தசமபாகம், காணிக்கைகள் செலுத்துவதோடு மட்டுமல்ல, நம்முடையவைகள் அனைத்தை யுமே, நம்மையே கர்த்தருக்கென்று முற்றிலுமாக ஒப்புவிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம்.** பாருங்கள், அந்த ஏழை விதவை தன் வறுமையிலிருந்து, தன் ஜீவனத்துக்கு உண்டாயிருந்ததெல்லாம் போட்டுவிட்டாள். லூக். 21:4. நாமோ நமது ஜீவனத்துக்கு எல்லாவற்றையும் ஒதுக்கிவிட்டு, மிச்சம் மீதி ஏதாவது இருந்தால் அதை காணிக்கையாகப் போடுகிறோம். அந்தோ பரிதாபம் !

ஊ. அப்போஸ்தலர்கள் காலத்தில். விசுவாசிகளெல்லாரும் தங்களுக்குரியவைகள் அனைத்தையும் விற்று ஒவ்வொருவனுக்கும் தேவையானதுக்குத் தக்கதாக அவைகளில் எல்லோருக்கும் பகிர்ந்துகொண்டார்கள். சகலத்தையும் ஒருமித்துப் பொதுவாய் அனுபவித்தார்கள். அவர்கள் ஒரே இருதயமும் ஒரே மன முள்ளவர்களாயிருந்தார்கள். அவர்களெல்லாரின் மேலும் பூரணகிருபை உண்டாயிருந்தது. அப். 2:44,45 , 4:32,33. இங்கு மணவாட்டி, ஆவிக்குரிய இஸ்ரவேலர் என்று மார்புதட்டி பேசும் நீ கர்த்தருக்குரிய தசமபாகத்தைக் கொடுப்பது இல்லை, கொடுத்தாலும் ரூ.500/- கொடுக்கவேண்டிய இடத்தில் ரூ.200/- கொடுத்து விட்டு ரூ.300/- கொடுக்காது கர்த்தரை ஏமாற்றுகிறாய். நீயும் கர்த்தரை வஞ்சிக்கிறதினால் சபிக்கப்பட்டவனே. இப்படியிருக்க கர்த்தருடைய பூரணகிருபை உன்மீது எப்படி உண்டாயிருக்கும்? உன்னை நீயே சீர்தூக்கிப்பார். நீ உன் வருவாய் அனைத்திலும் பத்தில் ஒரு பங்கை முதலில் கர்த்தருக்குரியத் தசமபாகமாக அவருக்குக் கொடுக்கக் கற்றுக்கொள். பின் அவரிடமிருந்து கிருபையை எதிர்பார்.

எ. யுத்தத்தில் வெற்றிபெற்ற ஆபிராமுக்கு மெல்கிசேதேக் அப்பமும் திராட்சரசமும் (இராப்போஜனம்) கொடுத்து ஆசீர்வதித்தான். இராப்போஜனம் பெற்ற ஆபிராம் மெல்கிசேதேக்குக்கு தசமபாகம் கொடுத்தான். ஆபிரகாமின் சந்ததியாகிய நாம் பாவத்தோடு யுத்தம் முடித்து நம்முடைய பாவமன்னிப்புக்கென்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்று மறுபக்கத்தை அடைந்தபின் செய்யும் முதற்காரியம் கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்குகொள்வதாகும். **இவ்வாறாக கர்த்தருடைய இராப்போஜனத் தில் பங்குகொள்ளும் ஒவ்வொரு வனும் கர்த்தருக்குரிய தசமபாகத்தை அவருக்குச் கொடுக்கவேண்டும். அவருடைய பாடு மரணத்தை நினைவு கூர்ந்து, அவருடைய மாம்சத்தைப் புஷித்து, இரத்தத்தில் பானம்**

**பண்ணுகிறவன் நன்றிக்கடனாக கர்த்தருக்குரிய தசமபாகத்தைக் கொடுக்கவேண்டும்.** நீங்கள் ஆபிரகாமின் பிள்ளைகளாயிருந்தால், ஆபிரகாமின் கிரியையைச் செய்யுங்கள். யோ. 8:39. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றவர்கள் அனைவரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டவர்கள். கிறிஸ்துவினுடையவர்கள் எல்லாரும் ஆபிரகாமின் சந்ததியாயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறார்கள். கலா. 3:16,27,29. நாமும் ஆபிரகாமின் கிரியையைச் செய்யும்போதுதான் வாக்குத் தத்தத்தின் படிச் சுதந்தரராவோம்.

34. **தசமபாகம் குறித்து புதிய ஏற்பாடு காலத்தில் இயேசு கிறிஸ்துவின் போதனைகள் என்ன?** தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டபோதும் மாயக்காரராகிய வேதபாரகரையும், பரிசேயரையும் குறித்து நீங்கள் தசமபாகம் கொடுக்கிறீர்கள், அதை ஆசரிக்கவேண்டியதுதான், மேலும் தேவனுடையதைத் தேவனுக்குச் செலுத்துங்கள் என்று தசமபாகம் கொடுப்பதை இயேசு கிறிஸ்து மத். 23:23, லூக். 11:42, மத். 22:21ல் உறுதிப் படுத்துகிறார். பரிசேயர் தங்கள் சம்பாத்தியத்தில் எல்லாம் தசமபாகம் கொடுத்தார்கள். லூக். 18:12.

35. **இன்று கர்த்தருக்குரியத் தசமபாகத்தை வாங்கத் தகுதியுள்ள லேவி யார்? இது ஒரு பெரிய கேள்வியாக நம் மத்தியில் இருந்து வருகிறது. தேவனுடைய வார்த்தையின்படி இன்றைய லேவியர், கர்த்தரால் ஏற்படுத்தப்பட்ட ஐந்து வகை ஊழியத்தில் உள்ள ஊழியர்களே. எபே. 4:11-13. இவர்கள் தசமபாகம் பெற்றுக் கொள்ள லேவியரைப்போன்று கர்த்தரையே தங்கள் பங்கும், சுதந்தரமுமாகக் கொண்டவர்களாயிருக்க வேண்டும். ஆனால் அப்படிப்பட்ட ஊழியர்களை இந்நாட்களில் நமது மத்தியில் காண்பது மிகமிக அரிது. இந்நாட்களில் ஐந்து வகை ஊழியத்தில் இருக்கிறோம் என்பவர்களில் பெரும்பாலானோர் தங்கள் திறமையினால் ஒரு மந்தையை உருவாக்கி, தங்களைத் தாங்களே அந்த மந்தைக்கு பாஸ்டர் ஆக்கிக்கொண்டு, தசமபாகத்தை முற்றிலுமாக அனுபவிக்கிறார்கள். இப்படிப்பட்ட ஊழியங்களுக்கு வேதத்தில் அடிப்படை ஆதாரங்கள் எங்கும் எதுவும் கிடையாது. இவர்களுக்கு அவர்கள் ஜனங்கள் மத்தியில் ஆஸ்திகள், சொத்துச்சுகங்கள் உண்டு, நல்ல வருமானமுள்ள அரசாங்க உத்தியோகம் உண்டு. இவர்கள் தங்களுக்குத் தாங்களே பாஸ்டர் என்ற பட்டம் சூட்டிக்கொண்டு, விசுவாசிகளிடமிருந்து தசமபாகத்தைப் பெற்று, அதை தங்களுக்கு ஒரு பக்க வருமானமாகக் கொண்டு ஆடம்பரமாக வாழ்கிறார்கள். இவர்கள் உறுதியில்லாத ஆத்துமாக்களைத் தந்திரமாகப் பிடித்து, பொருளாசையில் பழகின இருதயமுடைய சாபத்தின் பிள்ளைகளே.**

36. **Tithes goto the Levites. Levites are Ministers in the Gospel. Pastors are greedy and they setup little Kingdoms and became rich. They keep all the tithes to themselves and the rest of the Five Fold Ministry starves. That's antichrist.**

37. அன்று ஆசாரியனிடத்தில் வேதம். எரே. 18:18. ஆசாரியனுடைய வாயிலிருந்து வேதத்தைத் தேடுவார்கள். மல்.2:7. ஆசாரியன் வார்த்தையில் தேறினவனாக இருக்கவேணண்டும். மேலும் அங்கு ஆசாரியனுடைய கடமை தூபங்காட்டுதல். 2நாளா. 26:18. இன்று இது சபை பக்திவிருத்திக்காக கர்த்தர் ஏற்படுத்திய ஐந்துவகை ஊழியங்களுக்குரியதாகும். இன்று இவர்கள்தான் ஜெபதூபங்களை ஏறெடுக்கிறார்கள். வெளி. 5:8.

38. கர்த்தருடைய ஊழியம் தேவனுடைய இராஜ்யத்துக்குரியது. ஆதலால் ஊழியங்களை, ஊழியக்காரர்களை தாங்குவது விசுவாசிகள் ஒவ்வொருவருடைய கடமையாகும். ஐந்துவகை ஊழியத்தில் உள்ள ஊழியர்கள் உண்ணவும், உடுத்தவும் படவேண்டும். ஏனென்றால் சுவிசேஷத்தினால் பிழைப்பு உண்டு. 1கொரி. 9:14. நாங்கள் உங்களுக்கு ஞான நன்மைகளை விதைத்திருக்க சரீர நன்மைகளை அறுத்தால் அது பெரியக்காரியமா என்று பவுல் கொரிந்தியருக்கு எழுதுகிறான். 1கொரி. 9:11. கலாத்தியருக்கு எழுதும்போது திருவசனத்தில் உபதேசிக்கபடுகிறவன் உபதேசிக்கிறவனுக்குச் சகல நன்மைகளிலும் பகிர்ந்துக் கொடுக்கக்கடவன் என்கிறான். கலா. 6:6. அதே நேரத்தில் ஊழியர்கள் பொருளாசைக்காரர்களாக இருக்கக் கூடாது. 1தீமோ. 3:3. ஐசுவரியத்தைத் தேடக்கூடாது. 2கொரி. 12:14, 1பேது. 5:2, அப். 20:33-35.

39. இன்று நம் மத்தியில் பணஆசையுள்ள, கள்ள கபடமுள்ள வேலையாட்களே அதிகமதிகம். இவர்களை அடையாளம் கண்டுகொள்ள வேண்டியது விசுவாசிகள் ஒவ்வொருவருடைய கடமையாகும். தனக்குரியதல்லாததை, தகாதமுறையில் அடையமுயற்சிப்பது, அடைவது பிறனுடையபொருளை இச்சிப்பதாகும். இதற்கு வேதத்தில் நாம் அநேக எடுத்துக்காட்டுகளைக் காணலாம். உதாரணமாக யூதாஸ். மத். 26:15, பிலேயாம். 2பேதுரு. 2:15, எண். 22:5, கேயாசி. 2இராஜா. 5 : 20-27. ஆகாப், நாபோத்துக்குரியதை இச்சித்தான். 1இரா. 21அதி. ஆகான் கர்த்தருக்குரியதைப் பதுக்கினான். யோசு. 7:21. அனனியா, சப்பிராள் தேவனுடையதைப் பதுக்கினார்கள். அப். 5அதி. நாம் இவர்களது பணஆசையைக் குறித்தும், இவர்களது முடிவையும் நன்கு அறிவோம். கர்த்தருக்குரியத் தசமபாகத்தை அவருக்குக் கொடுக்காது, அவருடையதை இச்சிக்கிற ஒவ்வொருவனுடைய கதியும் மேற்கூறியவர்களுக்கு ஏற்பட்ட வண்ணமாகவே இருக்கும்.

40. ஒரு விசுவாசி தனிப்பட்ட ஒரு ஊழியக்காரனிடமிருந்து தனது ஆவிக்குரிய மன்னாவைப் பெற்றுவந்தால், அந்த தனிப்பட்ட ஊழியக்காரனுக்கு தன் தசமபாகத்தைக் கொடுக்கலாம்.

41. தேவனுடைய வார்த்தையில், இக்காலத்துக்குரிய செய்தியில் முற்றிலுமாக தன் குடும்பத்தாருடன் நிலைத்திருக்கும் ஊழியக்காரர்களை அறிந்தே அவர்களுக்கு கர்த்தருக்குரிய தசமபாகத்தைக் கொடுக்க வேண்டும். அவ்வண்ணமாக நிலைத்திராத ஊழியக்காரர்களை அடையாளம் கண்டு அவர்களுக்குக் கர்த்தருக்குரியதைக் கொடுக்கக்கூடாது. ஒருவன் தன்னை ஐந்துவகை ஊழியத்தில் ஒருவனாக அழைத்துக் கொள்கிறான். அவன் வேலை எதுவும் செய்வதில்லை. ஆனால் அவன் மனைவி வேலைசெய்து சம்பாதிக்கிறாள். ஆதலால் இவன் தேவனுடைய வார்த்தையில் நிலைத்திருக்கவில்லை. அப்படியானால் அவன் தேவனால் ஏற்படுத்தப்பட்ட வனாய் இருக்கமுடியாது. இப்படிப்பட்ட ஊழியர்களை அடையாளம்கண்டு அவர்களுக்கும் கர்த்தருக்குரியதைக் கொடுக்கக்கூடாது.

42. **பவுல் ஊழியத்தின் மேன்மை என்ன?** ஆசாரிய ஊழியம் செய்கிறவர்கள் தேவாலயத்துக் குரியவைகளில் புசிக்கிறார்கள் என்றும், பலிபீடத்தை அடுத்து பணிவிடை செய்கிறவர்களுக்குப் பலிபீடத்துக் கடுத்தவைகளில் பங்கு உண்டென்றும் அறியீர்களா? அந்தப்படியே சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்குச் சுவிசேஷத்தினாலே பிழைப்பு உண்டாகவேண்டுமென்றுக் கர்த்தரும் கட்டளையிட்டிருக்கிறார். அப்படியிருந்தும், நான் இவைகளில் ஒன்றையும் அனுபவிக்கவில்லை; இப்படி எனக்கு நடக்கவேண்டுமென்று இவைகளை நான் எழுதுகிறதுமில்லை : என் மேன்மை பாராட்டலை ஒருவன் அபத்தமாக்குகிறதைப் பார்க்கிலும் சாகிறது எனக்கு நலமாயிருக்கும். சுவிசேஷத்தை நான் பிரசங்கித்து வந்தும், மேன்மை பாராட்ட எனக்கு இடமில்லை; அது என்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது; சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால், எனக்கு ஐயோ. நான் உற்சாகமாய் அப்படிச் செய்தால் எனக்குப் பலன் உண்டு; உற்சாகமில்லாதவனாய்ச் செய்தாலும், உக்கிராண உத்தியோகம் எனக்கு ஒப்புவிக்கப்பட்டிருக்கிறதே. ஆதலால் எனக்குப் பலன் என்ன? நான் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கையில் அதைப்பற்றி எனக்கு உண்டாயிருக்கிற அதிகாரத்தை முற்றிலும் செலுத்தாமல், கிறிஸ்துவின் சுவிசேஷத்தைச் செலவில்லாமல் ஸ்தாபிப்பதே எனக்குப் பலன் என்கிறான். 1கொரி. 9:13-19. இப்படிப்பட்ட சிந்தையுடைய ஊழியர்கள் நம் மத்தியில் உண்டா? இது தன்னையே முற்றிலுமாக கிறிஸ்துவின் சுவிசேஷத்திற காக அர்பணித்த ஊழியம். ஆனால் இந்நாட்களில் தசமபாகத்திற்காகவும், காணிக்கைகளுக்காகவும் சுகபோக வாழ்க்கைக்காகவும் தங்களை சுவிசேஷத்திற்கு அர்ப்பணிக்கும் ஊழியமே நம் மத்தியில் காணப்படுகிறது. எல்லாம் போலி, எங்கும் போலிகள் மயம்தான்.

43. **ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆவிக்குரிய பிரகாரமாக ஆராய்ந்து நிதானிக்கிறான்.**

அ. கர்த்தர் ஆரோனை நோக்கி; அவர்களுடைய தேசத்தில் நீ ஒன்றையும் சுதந்தரித்துக் கொள்ளவேண்டாம்; அவர்கள் நடுவே உனக்குப் பங்கு உண்டாயிருக்கவும் வேண்டாம்; இஸ்ரவேல் புத்திரர் நடுவில் நானே உன் பங்கும் உன் சுதந்தரமுமாயிருக்கிறேன். இதோ, லேவியின் புத்திரர் ஆசரிப்புக் கூடாரத்தின் பணிவிடைகளைச் செய்கிற அவர்களுடைய வேலைக்காக, இஸ்ரவேலருக்குள்ளானவைகள் எல்லாவற்றிலும் தசமபாகத்தை அவர்களுக்குச் சுதந்தரமாகக் கொடுத்தேன். எண். 18:20,21. சபைக்காலங்களில் கூட கர்த்தருக் குரிய, பரிசுத்தமான தசமபாகத்தைப் பெறும் ஊழியர்கள், தாங்கள் வாழும் தேசத்தில் குடியிருக்கும் இடத்தில் எதையும் சுதந்தரித்துக் கொள்ளக்கூடாது. அவர்களுக்கென்று எந்தவிதமான ஆஸ்திகள், சொத்துக்கள் இருக்கக் கூடாது. அவர்கள் எந்த விதத்திலும் வருமானம் உடையவர்களாக இருக்கக்கூடாது. அவர்கள் முற்றிலுமாக கர்த்தரையே இந்தப் பூமியில் தங்கள் பங்கும், சுதந்தரமுமாகக் கொண்டிருக்கவேண்டும்.

ஆ. ஆக, இந்தப் பூமியில் கர்த்தரை மட்டும் பங்கும், சுதந்தரமுமாகக் கொள்ளாது, சொத்துக்களையும், ஆஸ்திகளையும் உடையவனாய், அரசாங்க அல்லது தனியார் துறையில் வேலைகள் செய்து வருமானம் உடையவனாயிருந்து தன்னை ஐந்துவகை ஊழியத்தில் ஒருவனாக அழைத்துக்கொண்டு, கர்த்தருக்குரிய பரிசுத்தமான தசமபாகத்தை முற்றிலுமாக அனுபவிக்கிறவன் கபடமுள்ள வேலையாள். அவன் தேவனை வஞ்சிக்கிறவன். ஆதலால் அவன் சபிக்கப்பட்டவன். அவன் நித்திய அழிவாகிய தண்டனையிலிருந்து தப்பமுடியாது.

இ. **இயேசு தம்முடைய மலைப்பிரசங்க வேளையில் தம்முடைய சீஷர்களுக்கு ஜெபம்பண்ண கற்றுக்கொடுத்த விதம் என்ன? எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத்தாரும். மத். 6:11. எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை ஒரு மாதத்திற்கு, ஒரு வருடத்திற்கு மொத்தமாகத் தாரும் என்று ஜெபிக்கக் கற்றுக்கொடுக்கவில்லை. தேவன் தம்முடைய ஊழியக்காரர்களை அனுதினமும் போஷிக்கவே சித்தம் கொண்டுள்ளார். அனுதினமும் தன் தேவைகளுக்காகக் கர்த்தரிடம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறவனே உண்மையும் உத்தமுமான ஊழியக்காரன். இவனே எல்லாவற்றையும் விட்டுவிட்டு அவருக்குப் பின் வந்தவன். இவனே கர்த்தருக்குரியத் தசமபாகத்திற்கு தகுதியுள்ளவன்.**

ஈ. **ஒருவன் இப்பூமியில் சொத்துக்கள், ஆஸ்திகள், கைகளின் பிரயாசங்கள் மூலமாக சுய வருமானம் மற்றும் கர்த்தருக்குரியத் தசமபாகம் இவை இரண்டையும் கொண்டு வாழ்க்கை வாழ்வானானால் அவன் செம்மையான வழியை விட்டு தப்பி நடந்து, அநீதியின் கூலியை விரும்பி பிலேயாமின் வழியில் நடக்கிறவன்.**

உ. **அரசாங்க ஊழியத்தில் இருப்பவர்களை கர்த்தர் தம்முடைய சரீரமாகிய சபை பக்தி விருத்தி அடைய ஊழியக்காரர்களாக ஏற்படுத்தினதாக வேதத்தில் எங்கும் ஆதாரங்கள் இல்லை. வேதத்தில் திருஷ்டாந்தமாக எழுதப்பட்டிராத எந்த ஒரு ஊழியத்தையும் நாம் அங்கீகரிக்கக் கூடாது.** ஆயக்காரனாகிய மத்தேயு ஒரு யூதன், ரோம சாம்ராஜ்யத்துக்கு வரிகள் வசூலிக்கும் பணியில் ருந்தான். இயேசு அவனை

ஆயத்துறையிலே உட்கார்ந்திருக்கக் கண்டு, எனக்குப் பின் சென்று வா என்றார். அவன் எழுந்து அவருக்குப் பின் சென்றான். மத். 9:9. அப்போஸ்தலர்கள் யாவரும் இந்த பூமியில் தங்களுக்குரியவைகள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு அதாவது தங்கள் சொத்துக்கள், ஆஸ்திகள், அரசாங்க பணிகள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு கர்த்தருக்குப் பின் சென்றார்கள். மத். 19:27.

ஊ. ஆனால் பவுல் கூடாரம் பண்ணுகிற தொழில் செய்கிறவனாயிருந்தான். அப். 18:3. கைகளினாலே தொழில்செய்து பாடுபடுகிறவனாயிருந்தான். 1கொரி. 4:12. இவன் அப்போஸ்தலன். சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்குச் சுவிசேஷத்தினாலே பிழைப்புஉண்டு. 1கொரி. 9:14. பவுல் ஒரு தொழில்செய்து வந்த தால் கர்த்தருக்குரியத் தசமபாகத்தைப் பெறாமல் சபைகளிடத்தில் சம்பளம் பெற்றான். 2கொரி. 11:8. இந்தத் திருஷ்டாந்தத்தின்படி, ஊழியத்தில் இருப்பவர்கள் சிறுசிறு தொழில்கள் செய்யலாம். ஆனால் அவர்களுக்கு கர்த்தருக்குரியத் தசமபாகத்தின் மீது முழுஉரிமை கிடையாது. வேலையாள் கூலிக்குப் பாத்திரவானாயிருக்கிற படியால், அவன் கர்த்தருக்குரியத் தசமபாகத்திலிருந்து தனக்குக் கூலியாக, சம்பளமாக ஒரு தொகையைப் பெற்றுக்கொள்ளலாம். இவ்வண்ணமாகவே இக்காலத்துக்குரியத் தீர்க்கதரிசியும் பெற்றுவந்தார்.

எ. ஒரு சபைக்கு தசமபாகத்தின் மூலம் மாதவருமானம் ரூ.5,000/- என்றால் அந்தத் தொகையை ஐந்துவகை ஊழியங்களுக்கும் பகிர்ந்து கொடுக்கவேண்டும். பாஸ்டர் ஒருவருக்கே கர்த்தருக்குரியத் தசமபாகம் என்பது கபடமுள்ள போதனையாகும். ஐந்துவகை ஊழியங்களுக்கும் உரியதான கர்த்தருக்குரியத் தசமபாகத்தை ஒரு ஊழியக்காரன் மட்டும் தனக்குரியதாக வைத்துக் கொள்வானானால் அவன் கர்த்தரை வஞ்சிக்கிறவன். அவனுக்கு நீதியுள்ள ஆக்கினையுண்டு.

ஏ. இஸ்ரவேல் புத்திரரும், யூதா புத்திரரும் மாடுகளிலும், ஆடுகளிலும் தசமபாகத்தையும், பரிசுத்தம் பண்ணப்பட்டவைகளில் தசமபாகத்தையும் கொண்டுவந்துக் குவியல்குவியலாக வைத்தார்கள். எசேக்கியாவும் பிரபுக்களும் வந்து, அந்தக் குவியலைக் காணும்போது, கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்தி ..... அந்தக் குவியலைக்குறித்து எசேக்கியா ஆசாரியரையும் லேவியரையும் விசாரித்தபோது .... இந்தக் காணிக்கை களைக் கர்த்தருடைய ஆலயத்திற்குக் கொண்டு வரத்தொடங்கினது முதல் நாங்கள் சாப்பிட்டுத் திருப்தியடைந் தோம்; இன்னும் மிச்சம் இருக்கிறது .... என்றான். 2நாளா. 31:5-11. அவ்வாறாகவே, இந்நாட்களிலும் சபைக்கு வரும் தசமபாகத்தை ஐந்துவகை ஊழியத்தில் உண்மையும் உத்தமமுமானவர்களுக்கு அவர்களை போஷிக்கப் பகிர்ந்து கொடுத்து, மீதமுள்ளதை சேமித்து வைக்கவேண்டும்.

ஐ. இஸ்ரவேல் புத்திரர் தங்கள் காணியாட்சியாகிய சுதந்தரத்திலே லேவியருக்குக் குடியிருக்கும்படி பட்டணங்கள் கொடுக்கவேண்டும். அந்தப் பட்டணங்களைச் சூழ்ந்திருக்கிற வெளி நிலங்களையும் கொடுக்கவேண்டும். அந்தப் பட்டணங்கள் அவர்கள் குடியிருப்பதற்கும், அவைகளைச் சூழ்ந்திருக்கிற வெளிநிலங்கள் அவர்களுடைய ஆடு மாடுகளுக்கும், அவர்களுடைய ஆஸ்திகளுக்கும் (**For their goods** ), அவர்களுடைய சகல மிருக ஜீவன்களுக்கும் ஆகும். தியானியுங்கள் எண். 35:2,3.

44. இதிலிருந்து நாம் கற்றுக்கொள்வது என்ன? கர்த்தருக்குரியத் தசமபாகம் ஊழியக்காரர்கள் தங்களையும், தங்கள் குடும்பத்தினரையும் போஷிப்பதற்கேயன்றி மற்றொன்றுக்குமல்ல. மேலும் கர்த்தரைத் தன் பங்கும் சுதந்தரமுமாகக் கொண்ட ஊழியக்காரனுக்கு குடியிருக்க வீடும், வெளிநிலங்களையும் தங்கள் சுதந்தரத்திலிருந்து கொடுப்பது சபையிலுள்ள விசுவாசிகளது கடமையாகும். கர்த்தருக்குரியத் தசமபாகத்திலிருந்து சபைக் கட்டிடம் கட்டுவது மற்றும் ஊழியக்காரர்களின் ஆடம்பர வாழ்க்கைக்கு பங்களா, கார் வசதிகள் செய்துக் கொடுப்பது, சபைக்கு சொத்துக்கள் வாங்குவது போன்ற இதர காரியங்கள் யாவும் கர்த்தரை வஞ்சிப்பதாகும். கர்த்தரை வஞ்சிக்கிறவன் சபிக்கப்பட்டவன். சபைக்குச் சொத்து என்ற போர்வையின் கீழ் பாஸ்டர் தனக்கே ஆஸ்திகளைச் சேர்க்கிறார்.

45. கர்த்தருக்குரியத் தசமபாகத்தை செலுத்தாதவர்கள் வஞ்சகர்கள். இவர்கள் கர்த்தருக்குரியதை கர்த்தருக்குச் செலுத்தாது, அவருக்குரியத் தசமபாகத்தை வஞ்சிக்கிற கொள்ளைக்காரர்கள். இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருக்குப் பயப்படாமலும், விதவைகளுக்கும், திக்கற்றப் பிள்ளைகளுக்கும், பரதேசிகளுக்கும் அநியாயம் செய்கிறதினால் அவர்களுக்கு விரோதமாய் தீவிரமாய் சாட்சியாயிருப்பேன் என்றும், நீங்கள் உங்கள் பிதாக்களின் நாட்கள் தொடங்கி என் கட்டளைகளைக் கைக்கொள்ளாமல், அவைகளை விட்டுவிட்டு விலகிப் போனீர்கள், என்னிடத்தில் திரும்புங்கள், அப்பொழுது நான் உங்களிடத்திற்குத் திரும்புவேன் என்றார் அவர்களுடைய தேவனாகிய கர்த்தர். அப்பொழுது ஜனங்கள், நாங்கள் எந்த விஷயத்தில் திரும்ப வேண்டும் எனக் கேட்டார்கள். கர்த்தர் அவர்களுக்குப் பிரதியுத்திரமாக மனுஷன் தேவனை வஞ்சிக்கலாமா? நீங்களோ என்னை வஞ்சித்தீர்கள் என்றார். அப்பொழுது ஜனங்கள் நாங்கள் எதினாலே உம்மை வஞ்சித்தோம் என்று கேட்டார்கள். அதற்குக் கர்த்தர், நீங்கள் என்னுடைய தசமபாகத்தையும், காணிக்கைகளையும் வஞ்சித்தீர்கள் என்றார். அதோடு மட்டுமல்ல என்னை வஞ்சித்த நீங்கள் சபிக்கப்பட்டவர்கள் என்றார். ஆம், தேவனாகிய கர்த்தர் அவருடைய கற்பனைகளின்படியும், நியாயத்தின்படியும் இஸ்ரவேல் ஜனங்களில் யார்யார் தங்களுடைய வருவாய் அனைத்திலும் தசமபாகத்தையும் காணிக்கைகளையும் தேவனுடைய ஆலய பண்டசாலைக்கு கொண்டுவராது அவரை வஞ்சித்தார்களோ அவர்களை நோக்கி " நீங்கள் சபிக்கப்பட்டவர்கள் " என்கிறார். மல். 3:5-9. அவ்வாறாகவே இந்நாட்களிலும் கர்த்தருக்குரியதைக் கர்த்தருக்குச் செலுத்தாது அதைத் தங்களுக்குரியதாகிக் கொள்கிறவர்கள் அனைவரும் வஞ்சகர்களே, சபிக்கப்பட்டவர்களே. இக்காலத்திற்குரிய செய்தியில் இருக்கிறோம் என்பவர்களில் நூற்றுக்கு பத்து பேராவது தசமபாகம் கொடுப்பார்களா என்பது சந்தேகமே. இந்நிலையில்

இவர்களைக் குறித்து என்ன சொல்வது? தாங்கள் மணவாட்டிகள் எனக் கூறி தங்களைத் தாங்களே வஞ்சித்துக் கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால் இவர்களும் கர்த்தரை வஞ்சிக்கிறவர்கள் தானே. கர்த்தருக்குரியதை வஞ்சிக்கும் இவர்கள் எப்படி கர்த்தருடைய மணவாட்டியாயிருக்க முடியும்? மணவாட்டி, மணவாட்டி என்பவர்கள் கர்த்தருக்குரிய தசமபாகம் விஷயத்தில் தங்களைத் தாங்களே சோதித்துப் பார்க்கவேண்டிய நிலையில் இருக்கிறார்கள்.

46. இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருக்குரிய, கர்த்தருக்குப் பரிசுத்தமான தசமபாகத்தையும் காணிக்கைகளையும் அவருடைய பண்டசாலைக்கு கொண்டுவராமலும், திக்கற்ற பிள்ளைகளையும், விதவைகளையும், அந்நியனையும், பரதேசிகளையும் ஒடுக்குகிறதினால் அவர்களைச் சபிக்கிறார். தசமபாகம் கர்த்தருக்குரியது. அவர் அதைக்கொண்டு திக்கற்ற பிள்ளைகளையும், விதவைகளையும், பரதேசிகளையும், அந்நியனையும் போஷிக்கிறார். அதோடு மட்டுமல்ல, தசமபாகத்தைக் கொண்டு தம்முடைய ஆலயத்தில் ஆசாரிய ஊழியம் செய்யும் லேவியரையும் போஷிக்கிறார். இவர்களுக்கு கர்த்தரே சுதந்தரம். அதாவது கர்த்தருக்குரியத் தசமபாகம் லேவியருக்குச் சுதந்தரம்.

47. கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களுக்குரியதை வாங்கி மேற்கூறியவர்களைப் போஷிக்கவில்லை. மாறாக தமக்குரியதையே தம்முடைய ஜனங்களிடமிருந்து வாங்கி மேற்கூறியவர்களை போஷிக்கிறார். ஆதலால் தான் தமக்குரிய தசமபாகத்தையும், காணிக்கைகளையும் அவருடைய ஆலய பண்டசாலையில் கொண்டுவந்து சேர்க்காத ஜனங்களைச் சபிக்கிறார், கொண்டுவரும் ஜனங்களை ஆசீர்வதிக்கிறார்.

48. சபைக்காலத்தில், தசமபாகத்தைச் சபை ஐந்துவகை ஊழியங்களுக்குப் பகிர்ந்து கொடுக்க வேண்டும். சபைக்குவரும் காணிக்கைகள் அந்தந்த சபைக்கு உரியது. அது ஐந்துவகை ஊழியத்துக்கு அல்ல. காணிக்கைகள் எந்தெந்த நோக்கத்திற்காகச் சேகரிக்கப்பட்டதோ அந்தந்த நோக்கத்திற்காகச் செலவிடப்பட வேண்டும். ஐந்துவகை ஊழியத்தில் உள்ளவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்க, சபைக்குக் கட்டிடம் கட்ட, மேலும் ஊழியத்தின் பாதையில் நேரிடும் செலவுகளுக்குக் காணிக்கைகள் சேகரிக்கப்பட வேண்டும். அதற்காக தசமபாகத்தைச் செலவிடக்கூடாது. ஆனால் இந்நாட்களில் பொதுவாக சபை பாஸ்டர்கள், சபைக்கு வரும் தசமபாகம் மற்றும் காணிக்கைகள் அனைத்தையும் தங்களுடையதாக்கிக் கொள்கிறார்கள், தங்கள் மனம்போன போக்கில் செலவுகள் செய்கிறார்கள். ஏனென்றால் அவர்கள் கபடமுள்ள வேலையாட்களே.

49. பொதுவாக சபைகளில், அதன் பாஸ்டர்கள் இதர ஊழியங்களை அனுமதிப்பதில்லை. தங்களைத் தாங்களே எல்லாவற்றிற்கும் எல்லாமுமாக்கிக் கொள்கிறார்கள், தசமபாகம் அனைத்தையும் சுருட்டிக் கொள்கிறார்கள். ஏதோ சில வேளைகளில் தங்களுக்குப் பிரியமான ஒருவரை செய்திக்காக அழைத்து, அவருக்கு ரூ.50/- 100/- எனக் கொடுத்து அனுப்பிவிடுகிறார்கள். இப்படிப்பட்ட ஊழியம் செய்கிறவனும் கபடமுள்ள வேலையாளே. தன் சபையில் ஐந்துவகை ஊழியங்களும் செயல்பட இடங்கொடுத்து, சபையை பக்திவிருத்தி அடையச் செய்கிறவனே, மற்றும் சபைக்கு வரும் தசமபாகத்தை ஐந்துவகை ஊழியங்களுக்கும் பகிர்ந்துக் கொடுக்கிற வனே உண்மையும் உத்தமுமான ஊழியக்காரன். ஆனால் இன்று பாஸ்டர்களில் உண்மையும் உத்தமுமான வர்களை கண்டுபிடிப்பது மிகமிக அரிது. ஏனென்றால் பாஸ்டர் ஊழியத்தில் பெரும்பாலானோர் போலிகளே.

50. ஆக, தசமபாகம் கர்த்தருக்குரியது. கர்த்தர் அதைத் தம்முடையச் சுதந்தரமாகிய லேவியருக்கும், இஸ்ரவேல் ஜனங்கள் மத்தியில் உள்ள பரதேசிகளுக்கும், திக்கற்றவர்களுக்கும், விதவைகளுக்கும் கொடுத்தார். ஆதி. 28:22, லேவி. 27:30, நீதி. 3:9, மல். 3:8, எண். 18:21, 2நாளா. 31:5, நெகே. 10:37, எபி. 7:5, உபா. 14:28,29. நாம் வாழும் இந்தச் சபைக்காலத்தில் தசமபாகம், கர்த்தர் தம்முடைய சரீரமாகிய சபை பக்திவிருத்தி அடைவதற்காக ஏற்படுத்திய ஐந்துவகை ஊழியங்களுக்கு உரிய தாகும். இவர்கள் கர்த்தரையே சுதந்தரமாகக் கொண்டவர்களாக இருக்கவேண்டும். ஆதலால் எந்த ஊழியக்காரனும் தன்னைத்தானே நிதானித்து சோதித்தறிந்து கர்த்தருக்குரியத் தசமபாகத்தில் பங்குபெற வேண்டும். அபாத்திரமாய் கர்த்தருக்குரியதில் பங்கு பெறுகிறவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படுவான்.

51. **தசமபாகம் கொடுப்பதின் பலன் என்ன?**

அ. கர்த்தர் அவர்கள் கைகள் செய்யும் வேலைகளிலெல்லாம் அவர்களை ஆசீர்வதிக்கிறார். உபா. 14:29.

ஆ. வானத்தின் பலகனிகளைத் திறந்து இடம் கொள்ளாமற்போகுமட்டும் தம்முடைய பரிசுத்த ஜனத்தின் மீது ஆசீர்வாதத்தை வருஷிக்கப் பண்ணுகிறார். மல். 3:10.

இ. பூமியில் உள்ள எல்லா ஜனங்களைப் பார்க்கிலும் புகழ்ச்சியிலும், கீர்த்தியிலும், மகிமையிலும் தம்முடைய பரிசுத்த ஜனத்தைச் சிறந்தவர்களாயிருக்கும்படிச் செய்கிறார். உபா. 26:18,19.

ஈ. தசமபாகம் பெறுகிறவர்கள் தேவனை மகிமைப்படுத்தி, கொடுக்கிறவர்களுக்காகத் தேவனிடத்தில் வேண்டுதல்கள் செய்கிறார்கள். 2 கொரி. 9:14.

52. **தசமபாகம் குறித்து லவோதிக்கேயா சபைத்தூதன் கூறுவதென்ன?**

அ. I do believe that every christian is obligated to pay tithings because it is a commandment of the Lord ….. Now, I do believe that tithe – paying is essential to a christian experience. Q & A. 136.

ஆ. I would like to give you a personal testimony of how that I was even hungry, and my mother and them hungry, and my daddy sick, but I took my tithes out first and give it to God …. Every chriatian should pay tithes. Q & A. 146. உன்னைக் கிறிஸ்துவின் மணவாட்டி என அழைத்துக் கொள்ளும் மனிதனே, உன் வாழ்க்கையில் இப்படிப்பட்ட அனுபவம் உண்டா? குடும்பத்தில் ஒரு பக்கம் பசி, பட்டினி மறு பக்கம் வியாதியில் தகப்பன், இந்நிலையிலும் முதலில் கர்த்தருக்குரியதைச் செலுத்தினாரே, அந்த மனுஷன் தான் பாக்கியவான், ஆசீர்வதிக்கப்பட்டவன்.

இ. **நீங்கள் இங்குள்ளபோது, தசமபாகங்களையும் மற்றவைகளையும் செலுத்துவதாக நான் காண்கிறேன். அது தேவனுடைய இராஜ்யத்துக்காக செலவிடப்படும் என்று நீங்கள் எங்கள் மேல் வைத்துள்ள நம்பிக்கையாகும். இதற்கு நாங்கள் பொறுப்பாளிகள். பாருங்கள், இதற்கு நாங்கள் கணக்கொப்பு விக்க வேண்டும். எனவே நாங்கள் செய்யும் ஒவ்வொன்றிலும் கவனமாயிருந்து, கர்த்தர் விரும்புகிற விதமாக எங்கள் ஒவ்வொரு அசைவும் பரிபூரணமாயிருக்க வேண்டுமென்று விரும்புகிறோம். ஏனென்றால் அவர் எந்த நேரத்தில் எங்களை அழைப்பார் என்று எங்களுக்குத் தெரியாது. அப்பொழுது நாங்கள் செய்த ஒவ்வொன்றிற்கும் அவருக்கு கணக்கு ஒப்புவிக்கவேண்டும். இதன் காரணமாகத்தான் பவுல் ஒரு அங்கியை மாத்திரம் வைத்திருந்தான். அவன் அதிக அங்கிகளை வைத்திருக்க முடியும். ஆனால் அவன் அவ்விதம் செய்ய விரும்பவில்லை ……. அவன் உலகத்தில் ஐசுவரியங்களுக்காகக் கவலைப்படவில்லை. அவன் புகழுக்காகக் கவலைப்பட வில்லை. ( இறங்கு வரிசையில் எண்ணுதல். பத்தி 6 , 7 )**

ஆனால் இன்று ஊழியர்கள் கர்த்தருக்குரியத் தசமபாகத்தை ஆடம்பரமான வாழ்க்கை வசதிகளுக்கும், தங்கள் பெயருக்கும், புகழுக்கும் எந்தெந்த வழியில் செலவிடமுடியுமோ அதைத் தான் செய்துக்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் கர்த்தருக்குரியதை வஞ்சிக்கிறவர்கள்.

ஈ. Every man ought to have a church home. You ought to have a place, not just to float about from pillar to post, but have some where that you goto church and you call it your church, some where you pay your tithe, and some where that you help support the cause. (Discernment of spirit. Page 5, Para 18)

உ. **தசமபாகம் கொடுத்தல் என்னும் தேவனுடைய முறைக்குத்திரும்புங்கள் தேவனுடைய வார்த்தைக்குத் திரும்புங்கள் ! அப்படிச்செய்ய அவர்களுக்கு விருப்பமா? இல்லை, ஐயா, அவர்களுக்கு விருப்பம் இல்லை (இன்னும் ஒரு விசை கர்த்தாவே. பக்கம் 44, பத்தி 130)**

ஊ. **The church are those who come and support the church with their presence, with their tithe and offerings, are always the ones that has legal say so ever anything in the church** ( The ordaining of deacons. Page 1, Para 1) **பாருங்கள், சபைக்கு வந்து தங்களுடைய தசமபாகம் மற்றும் காணிக்கை களினால் அதை ஆதரிப்பவர்களே அந்த சபை நடவடிக்கைகளில் ஈடுபட வேதப்பூர்வமாக அதிகாரம் கொண்டவர் கள். சபைக்கு வந்து தசமபாகம் மற்றும் காணிக்கைகளினால் அதை ஆதரிக்காதவர்களுக்கு அந்தச் சபையில் எந்தவிதமான உரிமையும் கிடையாது. பாருங்கள் காணிக்கை மட்டும் கொடுத்தால் போதாது, கர்த்தருக்குரியத் தசமபாகத்தையும் கொடுக்கவேண்டும். இரண்டையும் கொடுப்பவர்களே சபையில் வேதப்பூர்வமாக அதிகாரம் கொண்டவர்கள். சபையில் எக்காரியம் குறித்தும் குரல் கொடுக்க இவர்களுக்கே அதிகாரம் உண்டு.**

53. முடிவாக தசமபாகம் கர்த்தருக்குரியது. அது கர்த்தருக்குப் பரிசுத்தமானது. ஒவ்வொரு கிறிஸ்தவனும் தசமபாகம் மற்றும் காணிக்கைகள் தாங்கள் செல்லும் சபையில் கொடுக்கவேண்டும். ஒவ்வொரு விசுவாசியும் தனக்கென்று ஒரு சபையை உடையவனாக இருக்கவேண்டும். இது ஐந்துவகை ஊழியர்களுக்குப் பொருந்தாது. அவர்கள் அனைத்துச் சபைகளுக்கும் உரியவர்கள், பொதுவானவர்கள். ஆனால் ஒரு விசுவாசி ஒரு சபைக்குரியவனே. ஆக தசமபாகம் வாங்குகிறவர்கள் ஒவ்வொருவரும் தன்னைக் குற்றப்படுத்தாதபடிக்கு எச்சரிக்கையாயிருந்து, கர்த்தருக்கு முன்பாகவும் மனுஷர்களு க்கு முன்பாகவும் யோக்கியமானதைச் செய்ய நாடவேண்டும்.

## காணிக்கைகள்

54. **இது பொதுவாக விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தப்படியே ஒருவன் உற்சாகத்துடன், உத்தமத்துடன், பரிபூரண சந்தோஷத்துடன், மனப்பூர்வமாக உதாரத்துவமாய் கொடுக்கும் அன்பளிப்பாகும். ஆவிக்குரிய கிறிஸ்தவ வாழ்க்கையில் கொடுப்பது என்பது ஒரு முக்கிய அம்சமாகும்.** நாம் விசுவாசித்தால் மட்டும் போதாது. நாம் அன்பில் பெருகிவிட்டால் மட்டும் போதாது. சத்தியத்தை அறியும் அறிவில் தேறியிருந்தால் மட்டும் போதாது. போதிப்பதில் சாமர்த்தியம் உள்ளவனாய் இருந்தால் மட்டும் போதாது. சகல காரியத்தையும் ஞானமாய், ஜாக்கிரதையாய் செய்கிறவனாய் இருந்தால் மட்டும் போதாது கொடுப்பதிலும் பெருகவேண்டும். தியானியுங்கள் 2கொரி. 8:7. அன்பில் உண்மையுள்ளவர்கள் நிச்சயமாக

கொடுக்கும் தன்மையுள்ளவர்களாய் இருப்பார்கள். 2கொரி. 8:8. நமக்கு உள்ளவைகளிலிருந்து தாராளமனப் பான்மையுடன் எடுத்துக்கொடுக்கவேண்டும். பிறருடைய பொருளை அபகரித்து, கர்த்தருக்குரியதை திருடி அதிலிருந்து தாராளமாகக் கொடுப்பது கிறிஸ்தவனுக்கு அழகுஅல்ல. தியானியுங்கள் 2கொரி. 8:11. கிறிஸ்துவும் நம்மில் அன்பு கூர்ந்ததினால் நமக்காகத் தம்மைத் தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும், பலியாகவும் ஒப்புக்கொடுத்தார். எபே. 5:2.

55. **கொடுப்பது என்பது ஒரு கிருபை. அந்தக் கிருபையை தேவன் ஒருவனுக்குக் கொடுக்க வேண்டும். 2கொரி. 9:1,2. கொடுப்பது அன்பிற்கும் இரக்கத்திற்கும் ஒரு எடுத்துக்காட்டு. கிருபைப் பெற்றவர்களே இந்தக்கிருபையை கொடுக்கமுடியும். வாங்குவதைப் பார்க்கிலும் கொடுப்பது பாக்கியம். அப். 20:35.** கொடுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும், நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ, அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும் என்று இயேசு கூறுகிறார். லூக் 6:38. அவரும் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நாம் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு, நம் நிமித்தம் அவர் தரித்திரரானார். 2கொரி. 8:9. எவன் தண்ணீர் பாய்ச்சுகிறானோ அவனுக்குத் தண்ணீர் பாய்ச்சப்படும். நீதி. 11:25. அவன் இதோ தேவன் எனக்கு அநுக்கிரகம் செய்திருக்கிறார், வேண்டியதெல்லாம் எனக்கு உண்டு, கர்த்தரிடத்திலிருந்து பெற்று, கர்த்தருக்குக் கொடுக்கிறேன் என்ற உத்தம இருதயத்தோடு கொடுக்கவேண்டும். நாம் நற்கிரியைகளைச் செய்வதற்குக் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடையச் செய்கையாயிருக்கிறோம். எபே. 2:10.

56. கர்த்தருக்கு, அவருடைய நாமத்துக்குரிய மகிமையைசெலுத்தி, காணிக்கைகளைக் கொண்டு வந்து, அவருடைய சந்நிதியில் பிரவேசியுங்கள். 1நாளா. 16:22. கர்த்தருடைய சந்நிதியில் வெறுங்கையோடே வராமல் உன் தேவனாகியகர்த்தர் உனக்கு அருளிய ஆசீர்வாதத்திற்குத்தக்கதாக, அவனவன் தன்தன் தகுதிக்கு ஏற்றபடி காணிக்கைக்கொண்டுவரக்கடவன். உபா. 16:2. காணிக்கை சபைஆராதனையின் ஒருபாகம். சபைக்கூடும் இடத்தில் காணிக்கைப்பெட்டி வைக்கலாம். லூக். 21:1. வரவில் முதற்பலனை, உதாரணமாக ஒருவன் ஒரு மரம் வளர்த்தான், அதில் வரும் முதற்பலன் அனைத்தையும்; ஒருவன் படித்து முடித்து வேலைக்குச் செல்லுகிறான், அவன் வேலைக்கு வந்தவுடன் தன் முதல் வருமானம் அனைத்தையும், ஒருவன் ஒரு வீடுகட்டி வாடகைக்குக் கொடுத்தால் அதனால்பெரும் முதல்வாடகை அனைத்தையும் கர்த்தருக்குக் காணிக்கையாகச் செலுத்தவேண்டும். தியானியுங்கள் யாத். 22:29. உன் பொருளாலும், உன் எல்லா விளைவின் முதற்பலனாலும் கர்த்தரைக் கனம்பண்ணு. நீதி. 3:9.

57. கர்த்தர் மோசேயை, இஸ்ரவேல் புத்திரர் எனக்குக் காணிக்கையாகக் கொண்டுவரும்படி அவர்களுக்குச் சொல்லு. மனப்பூர்வமாய், உற்சாகத்துடன் கொடுப்பவன் எவனோ அவனிடத்தில் எனக்குக் காணிக்கையை வாங்குவீர்களாக என்றார். யாத். 25:2. இதைக்குறித்து பவுல் கொரிந்தியருக்கு எழுதும்போது, அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமுமாயுமல்ல தன்மனதில் நியமித்தப்படியே கொடுக்கக்கடவன்; உற்சாக மாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார் என 2கொரி. 9:7ல் எழுதுகிறான். பாருங்கள் அந்த ஏழைவிதவை தன் வறுமையிலிருந்து தன் ஜீவனத்துக்கு உண்டாயிருந்ததெல்லாம் போட்டு விட்டாள். லூக். 21:4.

58. தன் மந்தையில் கொழுத்த கடா இருக்கையில் கெட்டுப்போனதை கர்த்தருக்கு நேர்ந்து கொடுக்கிறவன் கபடஸ்தன், சபிக்கப்பட்டவன். மல். 1:14. அந்த திருஷ்டாந்தத்தின்படி தன் வருமானத்தில் முதலாவது தன் சரீரத்தைப் போஷித்து, ஆயுள்காப்பீட்டுக் கழகத்தில் தன்பணத்தைச் சேமித்துவிட்டு, வங்கியில் R.D. சேமிப்புகளைச் செலுத்திவிட்டு, வீட்டைக்கட்டி, சொத்துக்களை வாங்கி, தொழில்களில் பணத்தை முடக்கி, தன் பெண்பிள்ளைகளுக்கு பொன் ஆபரணங்களை திருமணத்திற்கு முன்னேற்பாடாக செய்து வைத்து, இவ்வாறாக தன் அனைத்து உலகப்பிரகாரமான காரியங்களுக்குத் தன் பணத்தைச் செலவுசெய்து விட்டு, ஒதுக்கிவிட்டு, மீதியுள்ளதில் கர்த்தருக்கென்று காணிக்கையாக ரூ.5/- , 10/- எனக் கொடுக்கிறவன் நிச்சயமாக கபடமுள்ளவனே, சபிக்கப்பட்டவனே.

59. லட்சக்கணக்கில், ஆயிரக்கணக்கில் நீ உன் பணத்தை பலவகையில் சேமித்துவிட்டு, கர்த்தருக்குக் காணிக்கையாகச் சில்லரை காசுக்களை சபை கூடுதல் வேளையில் கொண்டுவருகிற உன்னை கர்த்தர் சகிப்பாரோ, நிச்சயமாக சகிக்கமாட்டார். மல். 1:13,14. நீ எந்தெந்த வகைகளிளெல்லாம் உன் பணத்தைச் சேமிக்கமுடியுமோ, அந்தந்த வகைகளிளெல்லாம் சேமித்துவிட்டு, மிச்சமீதி இருப்பதை உன் தேவனாகிய கர்த்தருக்கென்றுக் கொடுக்காதே. உபா. 15:21 , லேவி. 22:21. அவர் அதைச் சகிக்கவே மாட்டார். அவர் உன் இருதயத்தின் சிந்தனைகள், எண்ணங்கள் எல்லாவற்றையும் அறிகிறவர். நீ உன் செல்வதிரட்சியி லிருந்துக் கர்த்தருக்கு உற்சாகமாகக்கொடுக்கப்பழகு. **கொடுக்கிறவர்கள் பழமையாய்ப்போகாத பணப்பைகளை யும், குறையாத பொக்கிஷத்தையும் பரலோகத்தில் தங்களுக்காக சம்பாதித்து வைக்கிறார்கள். லூக். 12:33.**

60. ஆயுள்காப்பீட்டுக் கழகத்தில் ஒருவன் பணத்தைச்சேமிக்கிறான். எதற்காக? அவன் எதிர்பாராத விதமாக மரித்துவிட்டால் அவன் குடும்பத்திற்கு நஷ்டாடு என்றப்பெயரில் பணஉதவிகள் கிடைக்கும் என்ற எண்ணத்தினால்தானே? ஆனால் இது குறித்து கர்த்தர் என்னக் கூறுகிறார்? திக்கற்றவர்களாய்ப் போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி. நான் அவர்களை உயிரோடேக் காப்பாற்றுவேன். உன் விதவைகள் என்னை நம்புவார் களாக. எரே. 49:11. தாவீதின் அனுபவம் என்ன? நான் இளைஞனாயிருந்தேன், முதிர்வயதுள்ளவனு மானேன்; ஆனாலும் நீதிமான் கைவிடப்பட்டதையும், அவன் சந்ததி அப்பத்துக்கு இரந்து திரிந்ததையும் நான் காண

விலலை. சங். 37:25. என்னத்தை உண்போம், குடிப்போம், உடுப்போம் என்ற கவலையே வேண்டாம். முதலாவது தேவனுடைய இராஜ்யத்தைத் தேடுங்கள். மத். 6:25-33. கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவனுக்கு ஒரு நன்மையும் குறைவுபடாது. நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக்கைவிடுவதுமில்லை என்கிறார். எபி. 13:5. தேவனுடைய வார்த்தையின் அடிப்படையில் ஆயுள் காப்பீட்டுக் கழகத்தில் பணம் சேமிப்பது, அதற்கு சந்தாதாரர்களை ஏற்பாடு செய்வது (L.I.C. Agent), அந்தக் கழகத்தோடு தொழில்ரீதியில் ஈடுபாடுடையவர்கள் அனைவரும் தேவனுடைய வார்த்தை மீது நம்பிக்கையற்ற அவிசுவாசிகளே.

61. ஆவிக்குரிய விசுவாசியாகிய நீ, உன் சகோதரன் ஒருவனுக்கு குறைவுண்டு என்றுக் கண்டால் அவனுக்குக் கொடு. 1யோ. 3:17, சங். 20:25. விதவைகளுக்கும், அனாதைகளுக்கும் கொடு. உபா. 26:12, யாக். 1:27. **உன் செல்வம் அவர்கள் வறுமைக்கு உதவட்டும். அது உங்கள் அன்பின் உண்மையை சோதிப்பதாகும். மிகுதியாய் சேர்த்தவனுக்கு அதிகமானதுமில்லை, கொஞ்சமாய்ச் சேர்த்தவனுக்குக் குறைவானதுமில்லை என்ற சமநிலைப்பிரமாணம் உங்களில் நிறைவேறட்டும்.** கொடுப்பதில் மக்கெதோனியா சபையார் தங்களைத்தாமே கர்த்தருக்கும், பின்பு அப்போஸ்தலர்களுக்கும் ஒப்புக்கொடுத்து தங்கள் திராணிக்கு மிஞ்சிக் கொடுத்தார்கள்.

62. இரட்சிக்கப்படாதவர்களிடமிருந்து, அவிசுவாசிகளிடமிருந்து காணிக்கைகளைப் பெறக்கூடாது. 2கொரி. 6:15, 3யோ. : 7.

63. **கர்த்தருடைய ஊழியங்களுக்கு உதவியாக காணிக்கைகளைக் கொடுக்கவேண்டும். பிலி. 4:18, அப். 24:17. நம்முடைய ஆஸ்திகள் மனுஷர்களை இரட்சிப்புக்குள் வழிநடத்த உபயோகப் படுத்தப் படட்டும். லூக். 16:9, 8:3.** ஒரு ஆவிக்குரிய கிறிஸ்தவன் வாரத்தின் முதல்நாள் அல்லது மாதத்தின் முதல்நாள் கர்த்தர் தனக்கருளிய ஆசீர்வாதத்தின்படி கர்த்தருடைய பரிசுத்தவான்களுக்குக் கொடுக்கலாம். 1கொரி. 16:2, சங். 16:1-3. சூனேமியாள் எலிசாவை உபசரித்தாள். 2இரா. 4:9,10. ஸ்திரிகள் தங்கள் ஆஸ்திகளினால் கர்த்தருக்கு ஊழியஞ்செய்தார்கள். லூக். 8:3. மக்கெதோனியா சபை விசுவாசிகள் தங்கள் திராணிக்கும், தங்கள் திராணிக்கு மிஞ்சியும் கொடுத்தார்கள். 2கொரி. 8:3. கொடுப்பதில் இவர்களுக்கு மிஞ்சியாரும் சபைக் காலங்களில் கொடுத்ததாக வேதத்தில் ஆதாரங்கள் இல்லை. இவர்கள் மத்தியில் பத்தில் ஒரு பங்கு என்ற பேச்சுக்கே இடம் இல்லை. ஏனென்றால், இவர்கள் தங்களையும், தங்களுடைய ஆஸ்திகளையும் கர்த்தருக் கென்று முற்றிலுமாக அர்ப்பணித்திருந்தார்கள். மிகுந்த உபத்திரவத்தினாலே சோதிக்கப்படுகையில், கொடிய தரித்திரத்தின் மத்தியில் பரிபூரண சந்தோஷத்துடன் மிகுந்த உதாரத்துவமாகக் கொடுத்தார்கள். 2கொரி. 8:2. தேவகிருபை பூரணமாக அவர்கள்மீது இருந்தது. தேவன் அருளிய சொல்லிமுடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம்.

64. **பொருத்தனை. நீ** உன் தேவனாகிய கர்த்தருக்குப் பொருத்தனை பண்ணியிருந்தால், அதைச் செலுத்தத் தாமதம் செய்யாதே; உன் தேவனாகிய கர்த்தர் அதை நிச்சயமாய் உன்கையில் கேட்பார், அது உனக்குப் பாவமாகும். நீ பொருத்தனை பண்ணாதிருந்தால், உன்மேல் பாவம் இல்லை. உன் வாயினால் சொன்னதை நிறைவேற்றவேண்டும்; உன் தேவனாகிய கர்த்தருக்கு உன் வாயினால் நீ பொருத்தனைப் பண்ணிச்சொன்ன உற்சாகபலியைச் செலுத்தித் தீர்ப்பாயாக. உபா. 23:21-23. நீ தேவனுக்கு ஒரு பொருத்தனை பண்ணிக்கொண்டால், அதைச் செலுத்தத் தாமதிக்காதே; அவர் மூடரில் பிரியப்படுகிறதில்லை; நீ நேர்ந்து கொண்டதைச் செய். நீ நேர்ந்து கொண்டதைச் செய்யாமற் போவதைப் பார்க்கிலும், நேர்ந்து கொள்ளாதிருப்பதே நலம். பிர. 5:4,5. **பரிசுத்தமானதை விழுங்குகிறதும், பொருத்தனை செய்தபின்பு யோசிக்கிறதும், மனுஷனுக்குக் கண்ணியாயிருக்கும். நீதி. 20:25.**

65. என் ஊழியத்தின் பாதையில் சிலர் என்னிடம் ஊழியங்களுக்காக உதவிகள் செய்வதாக வும், சிலர் நான் ஒரு ஊழியக்காரன் என்ற முறையில் எனது குடும்ப நலன்களுக்காக உதவிகள் செய்வதாகவும் பொருத்தனைகள் பண்ணி, பின் அதை அடியோடு மறந்துவிட்டதைக் கண்டிருக்கிறேன். இப்படிப்பட்டவர்கள் அந்தப் பொருத்தனைகளை செய்யாதிருந்தால் அது அவர்களுக்கு நலமாயிருந்திருக்கும்.

66. **பவுல் கொடுப்பதுக் குறித்து கொரிந்தியருக்கு எழுதுவது என்ன?** சிறுக விதைக்கிறவன், சிறுக அறுப்பான். பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான். அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தப்படியேக் கொடுக்கக்கடவன். உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமா யிருக்கிறார். வாரியிறைத்தான், ஏழைகளுக்குக் கொடுத்தான், அவனுடைய நீதி என்றன்றைக்கும் நிற்கும் என்று எழுதியிருக்கிறபடியாகும். விதைக்கிறவனுக்கு விதையையும், புசிக்கிறவனுக்கு ஆகாரத்தையும் அளிக்கிறவர் உங்களுக்கு விதையை அளித்து அதைப் பெருகப்பண்ணி, உங்கள் நீதியின் விளைச்சலை வர்த்திக்கச் செய்வார் என 2கொரி. 9:6-10 வசனங்களில் எழுதுகிறான் .

67. **நீங்கள் காணிக்கைகளைக் கொடுக்கும்போது** :

அ. எல்லாம் உம்மால் உண்டானது, உமது கரத்தினாலே வாங்கி உமக்குக் கொடுக்கி றோம் என மனப்பூர்வமாய்க் கொடுங்கள். யாத். 36:5, ரோ. 2:8, 1நாளா. 29:14.

ஆ. இரகசியமாய்க் கொடுங்கள். மத் 6:3.

இ. சந்தோஷமாய்க் கொடுங்கள். 1நாளா. 29:9, 2கொரி. 9:2.

ஈ. உத்தம இருதயத்தோடே உற்சாகமாய்க் கொடுங்கள். 1நாளா. 29:9

உ. உண்மையும் உத்தமுமாய்க் கொடுங்கள். அப். 5:1-10.

ஊ. இரக்கமனதுடன் கொடுங்கள். லூக். 10 : 33 - 35.

எ. இலவசமாய்க் கொடுங்கள். மத். 10 : 8.

ஏ. உங்கள் தகுதிக்கு உட்பட்டுக் கொடுங்கள்.

ஐ. உங்கள் தகுதிக்கு மிஞ்சும் கொடுங்கள். உபா. 16 : 7, 2கொரி. 8 : 3 , 12 , 1கொரி. 16 : 2 , அப். 11 : 29.

68. தசமபாகம் கொடுத்தல் , காணிக்கைகள் செலுத்துதல் விஷயத்தில் சமுதாய ஸ்திதியும் (**Social position**), செல்வமும், செல்வாக்கும் சபையில் மக்களைப் பாகுபடுத்தக்கூடாது. ஏனென்றால் பொன் மோதிரம், மினுக்குள்ள வஸ்திரம் தரித்துத் தசமபாகம், காணிக்கைகளைத் தாராளமாய்க் கொடுக்கிற ஒரு மனுஷனும், கந்தையான வஸ்திரம் தரித்துத்தன் ஏழ்மையில் குறைவாய்க் கொடுக்கும் ஒரு தரித்திரனும் உங்கள் சபைக்கு வரும்போது, ஐசுவரியவானைப் பார்த்து நீங்கள் இங்கு இந்த மேன்மையான இடத்தில் உட்காருங்கள் என்றும், தரித்திரனைப் பார்த்து நீ இங்கே கீழே உட்கார் என்றும் சொல்லுவோமானால், அது தேவனால் உண்டாது அல்ல, மாறாக அது சாத்தானால் உண்டானது. இந்தப்பாகுபாடு அநேக சபைகளில் இன்றும் காணப்படுகிறதே.

69. இந்நாட்களில் தசமபாகம், காணிக்கைகளைக் கொண்டு சபைக்கு நல்ல கட்டிடங்களைக் கட்டுகிறோம். புத்தகங்களை வெளியிடுகிறோம், ஒலி, ஒளி நாடாக்களை வெளியிடுகிறோம், ஊழியர்கள் கூட்டங்கள் நடத்துகிறோம், பாட்டுப் புத்தகங்களை வெளியிடுகிறோம், ஆனால் இவை அனைத்துக்கும் மேலான ஆத்துமாக்களை இரட்சிக்கக் கூடிய தேவனுடைய வார்த்தையை, சுவிசேஷத்தை மட்டும் பிரசங்கிக்க மறந்து விட்டோம். இது சபையின் பரிதாபமான நிலையைக் காட்டுகிறது.

70. ஊழியத்துக்காக ரூ.1,000/- கொடுக்க இத்தனைப் பேர்கள், ரூ.500/- கொடுக்க இத்தனைப் பேர்கள், ரூ.100/- கொடுக்க இத்தனைப் பேர்கள். தேவைப்போன்ற பணம் பறிக்கும் விளம்பரங்கள் யாவும் பகல் கொள்ளையாகும். இப்படி விளம்பரம் செய்கிறவர்கள் தேவனால் ஏற்படுத்தப்பட்ட ஊழியர்கள் அல்ல. தேவனால் ஏற்படுத்தப்பட்ட ஊழியத்தில் பணம் சுரண்டும் தொழில் இருக்காது. பெரிய பெரிய கட்டிடங்கள் கட்டுதல், பல்கலைக் கழகங்களை உருவாக்குதல், ஆஸ்பத்திரிகள் கட்டுதல், பள்ளிக்கூடங்களை நடத்துதல் போன்ற தொழில்கள் கர்த்தருடைய ஊழியக்காரர்களிடம் காணப்படக் கூடாது. இவைகள் யாவும் சமுதாயத்துக்குத் தேவைதான். ஆனால் கர்த்தர் தம்முடைய ஊழியக்காரர்களை இப்படிப்பட்டக் காரியங்களில் ஈடுபடுத்தமாட்டார். ஆதலால் இப்படிப்பட்டக் காரியங்களில் தங்களை ஈடுபடுத்திக்கொள்ளும் ஊழியர்களை அடையாளம் கண்டு, அவர்களுக்கு கர்த்தருக்குரிய பரிசுத்தமான தசமபாகம் மற்றும் காணிக்கைகளைக் கொடுத்து உங்கள் பணத்தை லோபத்தனமாக செலவு செய்தால் அதினால் உங்களுக்குப் பிரயோஜனம் ஒன்றும் இராது. பண அந்தஸ்தும், உத்தியோகத் திறமையும், சமுதாயத் தலைமையும், உலக ஞானமும் ஒருவனைத் தேவனுடைய ஊழியத்துக்குத் தகுதிப்படுத்துவதில்லை. பரிசுத்த ஆவியின் மூலமேயன்றி, மனிதன் தன் அந்தஸ்து மூலமாயும், உலகக்காரியங்கள் மூலமாயும் தேவனுடைய ஊழியத்தைச் செய்யத் தலைப்பட்டால், அவன் தேவனுக்கு ஒத்தாசை செய்கிறவனாகக் காணப்படாமல், தேவனை எதிர்க்கிறவனாயிருக்கிறான்.

71. ஆக, இந்தச் செய்தி கர்த்தருக்குரியத் தசமபாகம் மற்றும் காணிக்கைகள் தனக்குரியது அல்லாதிருந்தும் அவைகளைத் திருடிய, திருடிக்கொண்டிருக்கிற திருடர்கள் திருந்துவதற்கும், இந்தச் செய்தியை தியானிக்கையில் இருதயத்தில் குத்தப்பட்டு இதுவரை திருடியதை சகேயுவைப் போன்று நாலத்தனையாகத் திருப்பிக் கொடுப்பதற்கும் ஏதுவாக இருக்கும் எனக் கிறிஸ்துவுக்குள் நம்புகிறேன். குருவிகளால் கூண்டு நிறைந்திருக்கிறது போல, யாருடைய வீடுகள் கர்த்தருக்குரியத் தசமபாகத்தினாலும் காணிக்கைகளினாலும் கபடாய் நிறைந்து, அதில் அவர்கள் பெருகி ஐசுவரியவான்களாகினார்களோ அவர்கள் மனம் மாற இந்தச் செய்தி அவர்களுக்கு ஊன்றுக்கோலாக இருக்குமெனவும் நினைக்கிறேன். தன்னுடையதல்லாததை தனக்காக சேர்த்துக் கொள்கிறவனுக்கு ஐயோ ! தன் வீட்டுக்குப் பொல்லாத ஆதாயத்தைத் தேடுகிறவனுக்கு ஐயோ ! என வேதம் ஆபகூக் 2 : 6,9ல் கூறுகிறது.

72. நீங்கள் இவைகளை வாசித்தும், இதற்கு மாறாக உங்கள் மன இஷ்டப்படி நடந்து உங்கள் இருதயத்தைத் தேற்றிக்கொண்டால் கர்த்தர் உங்களை மன்னிக்கச் சித்தமாயிறார். ஆதலால் இந்த உபதேசத்தை விட்டு விலகுவதற்கு ஏதுவான நஞ்சையும், எட்டியையும் முளைப்பிக்கிற யாதொரு வேர் உங்களில் இராதபடிக்குப் பார்த்துக்கொள்ளுங்கள்.

73. சமாதானத்தின் தேவன்தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும்போது குற்றமற்றதாய் இருக்கும்படி காணப்படுவதாக. நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபை உங்களனைவரோடுங்கூட கர்த்தருடைய வருகை பரியந்தம் நிலைத்திருப்பதாக. ஆமென்.

பிப்ரவரி , 2001

கிறிஸ்துவின் அன்பில்,

**சகோ. காலேப் யோசுவா.**